2019

වාර්ෂික කාර්ය සාධන වාර්තාව

வருடாந்த செயற்றிறன் அறிக்கை

Annual Performance Report



රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව

அரசாங்க தகவல் திணைக்களம்

Department of Government Information

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2019



அரசாங்க தகவல் திணைக்களம்

இல. 163, கிருலப்பன மாவத்தை,
பொல்ஹேன்கொட,
கொழும்பு - 05

வருடாந்த செயலாற்றுகை அறிக்கை – 2019

அரசாங்க தகவல் திணைக்களம்

செலவுத் தலைப்பு இலக்கம் : 210

உள்ளடக்கம்

	பக்கம்
அத்தியாயம் 01 – நிறுவன கட்டமைப்பு / அமுல்படுத்தல் சாராம்சம்	01 – 12
அத்தியாயம் 02 – முன்னேற்றம் மற்றும் தொலைநோக்கு	13 – 19
அத்தியாயம் 03 – ஆண்டுக்கான முழுமையான செயலாற்றுகை	20 – 41
அத்தியாயம் 04 - செயலாற்றுகைச் சுட்டி	42 – 43
அத்தியாயம் 05 – நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை ***(SDG)*** அடையும் செயலாற்றுகை	44 – 45
அத்தியாயம் 06 – மனித வளக் கூறுகள்	46 – 48
அத்தியாயம் 07 - இணக்க அறிக்கை	49 – 58
முடிவு	59 - 60

அத்தியாயம் 01

நிறுவன கட்டமைப்பு / அமுல்படுத்தல் சாராம்சம்

நிறுவனக் கட்டமைப்பு / அமுல்படுத்தல் சாராம்சம்

1.1 அறிமுகம்

1.2 நிறுவனத்தின் தொலைநோக்கு, பணிக்கூற்று, நோக்கம்

1.3 பிரதான பணிகள்

1.4 நிறுவனக் கட்டமைப்பு குறிப்புகள்

1.5 அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் / திணைக்களத்தின் பிரதான பிரிவுகள் / மாவட்ட செயலகங்களின் கீழுள்ள பிரதேச செயலகங்கள்

1.6 அமைச்சு / திணைக்கள / மாகாண சபைகளின் கீழுள்ள நிறுவனங்கள் / நிதியம்

1.7 வெளிநாட்டு நிதியுதவிகள் கிடைக்கின்ற திட்டங்கள் தொடர்பான தகவல்கள் (இருப்பின்)

அ). கருத்திட்டம்

ஆ). பங்களிக்கின்ற முகவர் நிறுவனம்

இ). கருத்திட்ட மதிப்பீட்டு செலவு - ரூ.மி

ஈ). கருத்திட்டக் காலப்பகுதி

1.1 அறிமுகம்

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் போது ஏற்பட்ட இரண்டாம் உலக யுத்தத்தின் போது போர் தொடர்பான தகவல்களை மக்கள் மத்தியில் பரிமாறிக் கொள்வதற்காக "War Information Centre" செயற்பட்டது.

உலக யுத்தம் முடிவுற்றதன் பின்னர் குறித்த போர்த் தகவல்களை வழங்கிய நிலையம் அரசாங்க அபிவிருத்திப் பணிகள் பற்றிய தகவல்களை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக அரசாங்கத் தகவல் திணைக்களம் எனும் பெயரிலான நிறுவனத்தை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பெறுபேறாக 1948 ஜூலை மாதம் 31 ஆம் திகதி சோல்பரி ஆணைக்குழுவின் ஆலோசனை மற்றும் விதந்துரைகளுக்கமைய கொழும்பு காலிமுகத்திடல் செயலகக் கட்டிடத்தொகுதியில் முதற் தடவையாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தாபிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் அரசாங்க தகவல் திணைக்களம்,

1. செய்தி வழங்கல் பிரிவு
2. அரசாங்க புத்தகங்கள் நிறுவனம் மற்றும்
3. அரசாங்க திரைப்படப் பிரிவு

ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டதாகும்.

அதற்கமைய, அரசாங்கம் மேற்கொள்கின்ற தேசிய அபிவிருத்திப் பணிகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான மூன்று பிரதான பணிகளை அடிப்படையாகக் கொண்டு, பிரதானமாக மூன்று பிரிவுகளின் கீழ் தாபிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரதான பணிகளாக அமைந்தன.

1. அரச அபிவிருத்தி பற்றிய செய்திகள் மற்றும் பிரச்சார நடவடிக்கைகளை நெறிப்படுத்துதல்.
2. அரசாங்க வெளியீட்டுப் பணியகத்தால் அரசின் உத்தியோகபூர்வ வெளியீடுகளை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லல். (அச்சிடுதல் மற்றும் விநியோகித்தல்)
3. ரசால் நிறைவேற்றப்படும் தேசிய அபிவிருத்தி பணிகளை கிராம மட்டத்தில் மக்களை தெளிவூட்டுவதற்காக அரசாங்க திரைப்பட பிரிவின் மூலம் ஆவணத் திரைப்படங்களைத் தயாரித்து, காட்சிப்படுத்துதல்.

காலிமுகத்திடல் செயலகக் கட்டிடத் தொகுதியிலிருந்து நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவுகளும் காலத்துக்கு காலம் ஆங்காங்கே நிறுவப்பட்டன. அவற்றில் ஜாவத்த நீர்ப்பாசனத் திணைக்களக் கட்டிடம், மொரட்டுவ தென்னந்தோட்ட வெலோனா கட்டிடம், கோட்டை ட்ரான்ஸ்வேர்க் மாளிகை, ஸ்ரீமத் பரோன் ஜயதிலக்க மாவத்தையிலுள்ள அத்தப்பத்து கட்டிடம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். 90 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொள்ளுப்பிட்டி தனியார் கட்டிடத்தில் இரண்டு மாடிகளில் இயங்கிவந்த திணைக்களம் அப்போது அரச திரைப்படப் பிரிவு இயங்கிவந்த பொல்ஹேன்கொட வளாகத்துக்கு கொண்டுவரப்பட்டது. அன்று தொடக்கம் இவ்வளாகத்தில் புதிய கட்டிடத்தை நிர்மாணித்து நிறுவனத்தின் வெவ்வேறு பிரிவுகளையும் ஒரே வளாகத்துக்கு கொண்டுவருவதற்கு நிறுவனத் தலைவர்கள் நடவடிக்கை எடுத்தார்கள். அதன் பெறுபேறாக சிறந்த சேவை வழங்கலுக்கான ஆளணியினருக்கு வழங்கப்பட்ட பரிசாக இவ்வளாகத்தின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட ஐந்து மாடிகளை கொண்ட புதிய ஊடக அபிவிருத்தி நிலையம் 2012 மார்ச் 30 ஆம் திகதி சுபமுகூர்த்தத்தில் திறந்து வைக்கப்பட்டது.

தற்போது அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் பதவி வரை நிறுவன தலைவரின் தரம் உயர்த்தப்பட்டுள்ள போதிலும், ஆரம்பத்தில் அந்த பதவி தகவல் அத்தியட்சகர் எனும் பதவியாக அமைந்தது. 1948 ஆம் ஆண்டில் முதலாவது தகவல் அத்தியட்சகராக திரு. நடேசன் அவர்கள் பதவிவகித்ததுடன், அப்பதவி தகவல் பணிப்பாளர் மற்றும் தகவல் பணிப்பாளர் நாயகம் வரை நிறுவன பிரதானியின் பதவி உயர்த்தப்பட்டுள்ளது.

இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக அனுபவமும், பாண்டித்தியமும் பெற்ற ஊடகவியலாளரும், பத்திரிகையாளருமான எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல அவர்கள் அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரதான தகவல் அலுவலராக நியமிக்கப்பட்டார். அத்துடன்,

உதவி தகவல் அலுவலர்களாக பி.என். மெத்தேகொட, எல்.ஆர். குணதிலக, எஸ்.பி. வெத்தசிங்க, பி.பீ. விஜேசிங்க ஆகியோர் பணியாற்றியுள்ளார்கள்.

அப்போது இராஜாங்க அமைச்சின் செயலாளர் பதவி வகித்த சிரேஸ்ட அமைச்சர் கலாநிதி. சரத் அமுனுகம அவர்களது எண்ணக்கருவுக்கு அமைய 1978 பெப்ரவரி 4 ஆம் திகதி தகவல் திணைக்களத்தின் முதன்மை வெளியீடான "தெசத்திய" சஞ்சிகையின் முதல் பிரதி வெளியிடப்பட்டதுடன், அது இலங்கையின் வெகுசன தொடர்பு ஊடகத்தின் திருப்புமுனையாக அமைந்தது. அது பல யுகங்களை கடந்து ஆக்கபூர்வமான மைல்கற்களைக் கடந்து தொடர்ச்சியாக மக்களின் மனதை மெருகூட்டிவரும் அச்சு ஊடகமாகும்.

தெசத்திய சஞ்சிகையினால் பெருமளவு எழுத்தாளர்கள் ஊட்டம் பெற்றார்கள். பெருமளவு வாசகர்களும் உள்ளார்கள். இந்த நாட்டின் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்வோர் தொடக்கம் விவசாயிகள், தொழிலாளிகள் வரை அனைத்து தரப்பினரையும் பிரதிநிதித்துவப்படுத்தி இலங்கை அரச துறையால் வெளியிடப்பட்ட ஒரேயொரு தகவல் சஞ்சிகையாகவும் "தெசத்திய" அமைந்தது. குறிப்பாக அரசின் கொள்கைகள் மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை மக்கள் மயப்படுத்தும் முதன்மைப் பொறுப்பை தோளில் சுமந்த 'தெசத்திய' அதனையும் தாண்டிச்சென்று மக்களின் புலமைசார் புரட்சியை ஏற்படுத்துவதில் வெற்றி பெற்றது. சமூக, பொருளாதார, கலாச்சார, கலை, சர்வதேச மற்றும் மேலும் பல துறைகள் தொடர்பான தகவல்கள் மிகவும் எளிமையான மொழிநடையில் வாசகர்களின் இரசனையை அதிகரிக்கும் வகையில் முன்வைப்பதில் தெசத்திய வெற்றி பெற்றது.

தெசத்திய சஞ்சிகைக்கு மேலதிகமாக "தகவல்" எனும் பெயரிலான வாரப் பத்திரிகையும், "Alliance" பெயரிலான ஆங்கில பத்திரிகையும் அந்த காலத்தில் வெளியிடப்பட்டது.

மிகவும் சிறிய ஆளணியினருடன் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்க தகவல் திணைக்களத்தில் 2019 ஆண்டின் இறுதியில் நிரந்தர, ஒப்பந்த மற்றும் நாளாந்த அடிப்படையில் 235 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுகின்றனர்.

அரச நிறுவனங்களில், நேரடியாக பொது மக்களுக்கு செய்திகளை வழங்கும் ஊடக நிறுவனங்களுடன் தொடர்புபடும் நிறுவனம் என்பதனால் அரச நிறுவனங்களில் தகவல் திணைக்களம் முக்கியத்துவமான நிறுவனமாக அமைகின்றது. அரசாங்க தகவல் திணைக்களத்தால் வெளியிடப்படும் அறிவித்தல்கள் அனைத்தும் மிகவும் சரியான தகவல்களை உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

அவ்வாறு செய்திகளை வழங்குவதுடன், அந்தந்தக் காலப்பகுதிகளில் அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களுக்கு அமைவாகச் செயற்பட வேண்டியிருந்தது. 1979, 1980, 1981, 1983, 1987, 1995, 1996 மற்றும் 2000 ஆண்டுகளில் அரசாங்கம் செய்தி தணிக்கைகளை மேற்கொண்டதுடன், அந்த சந்தர்ப்பங்களில் நாட்டில் குழப்பகரமான சூழ்நிலைகளே அதற்கான காரணமாக அமைந்தது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் செய்தித் தணிக்கைகளை மேற்கொள்கின்ற அதிகாரியாக தகவல் பணிப்பாளருக்கு குறித்த கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்தன.

1993 ஆண்டில் தொலைக்காட்சி அலைவரிசைகள் முதல் தடவையாக செய்திகளை ஒளிபரப்புவதற்கு அரசாங்கம் அனுமதி வழங்குதல் எமது நாட்டின் ஊடக வரலாற்றில் முக்கியமான சம்பவமாக கருதலாம். அதற்கு இணையாக பொது மக்களுக்கு தேவையான தகவல்களை இலகுவாக பெற்றுக் கொள்வதற்காக 1995 மே 18 ஆம் திகதி தேசிய தகவல் நிலையத்தை உருவாக்கியமை அரசாங்க தகவல் திணைக்களத்தின் மேலுமொரு நடவடிக்கையாகும். அந்நிலையம் கொழும்பு கோட்டை, ட்ரான்ஸ்வேர்க்ஸ் மாளிகையில் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் ஊடகவியலாளர்கள் மத்தியில் நட்புறவை மேம்படுத்துவதற்காக "Press Club" தாபிக்கப்பட்டது.

திணைக்களம் திடீரென ட்ரான்ஸ்வேர்க்ஸ் மாளிகையிலிருந்து அகற்றப்பட்ட பின்னர், கொள்ளுப்பிட்டியில் இருமாடி தனியார் கட்டிடத்துக்கு கொண்டு செல்லப்பட்டது.

அரசாங்க வெகுசன ஊடகக் கட்டமைப்பில் நிலவிய மட்டுப்பாடுகளை அடையாளம் கண்டு, அபிவிருத்திப் பணிகளில் மக்களின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கத்துடன், குறிப்பாக அரசின் கமத்தொழில் புத்தெழுச்சி, ஜனநாயகத்தை பலப்படுத்துதல், சர்வஜன வாக்குரிமையில் மக்களின் பணி போன்ற விடயங்களில் மக்களை தெளிவுபடுத்தும் போது, அரசாங்க தகவல் திணைக்களத்துக்கு ஒப்படைக்கப்பட்ட பொறுப்புகளை மிகவும் வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்காக அரசாங்க திரைப்படப் பிரிவு, அரசாங்க வெளியீட்டுப் பணியகம் போன்றவற்றினால் மிகப் பரந்தளவிலான பணிகள் அக்காலத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆரம்பகாலம் தொடக்கம் அரச பிரச்சார செயற்திட்டத்தை உள்நாட்டு ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் நிறைவேற்றிய அரசாங்க தகவல் திணைக்களம் இலங்கையின் வெளிநாட்டு தூதரகங்களை இலக்காக கொண்டு கையேடுகள், சஞ்சிகைகள் போன்றவற்றை தொடர்ச்சியாக விநியோகிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அக்காலப்பகுதியில் வெளிநாட்டுத் தூதரகங்களை இலக்காகக் கொண்டு வெளியிடப்பட்ட "Week Happening in the Island" சஞ்சிகை, "Introduction Ceylon" போன்ற வெளியீடுகள் மூலம் இலங்கை தொடர்பான விசேட தகவல்களை வெளிநாடுகளுக்கு வழங்க நடவடிக்கை

எடுக்கப்பட்டது. பிற்காலத்தில் இலங்கை தொடர்பான தகவல்களை வெளிநாடுகளில் பிரச்சாரம் செய்வதற்காக "Sri Lanka Today" பெயரிலான மும்மாத சஞ்சிகை வெளியிடப்பட்டது.

அரசாங்க வெளியீட்டு பணியகமும் மிகவும் பரந்த நோக்குடன் இயங்கி அரசாங்கத்தின் சட்டங்கள், கட்டளைச் சட்டங்கள் தொடர்பான உத்தியோகபூர்வ வெளியீடுகளை பொதுமக்கள் கொள்வனவு செய்வதற்காக அச்சிட்டு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் ஆரம்பகால அலுவலராக R.V.H.Vantwest அவர்கள் பணியாற்றியுள்ளார்.

ஜுலியோ பெற்ரோனி அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட அரசாங்கத் திரைப்படப் பிரிவு, சுதந்திரத்தின் பின்னர் எமது நாட்டில் ஏற்பட்ட தேசிய அபிவிருத்தி தொடர்பில் பொது மக்களை தெளிவுபடுத்துவதற்காக ஆவணத் திரைப்பட தயாரிப்பு மூலம் பெரும் பணி மேற்கொள்ளப்பட்டது. பிற்காலத்தில் பல புகழ்பெற்ற ஆவணத் திரைப்பட இயக்குநர்களை உருவாக்கிய இப்பிரிவு, பாரிஸ் சர்வதேச திரைப்பட விழா போன்ற வெளிநாட்டு திரைப்பட விருது விழாக்கள் பலவற்றில் ஆவணமாக்கல், பகுதியளவில் ஆவணமாக்கல் பிரிவில் இலங்கைக்கு விருதுகளைப் பெற்றுக்கொடுத்துள்ளது.

1948 ஆண்டு சுதந்திரம் பெற்றவுடன் உருவாக்கப்பட்ட திணைக்கள மாதிரியில் பயணிக்கக்கூடிய உச்சம் வரை பயணிக்கும், தனது பயணப் பாதையில் அன்றைய நாளை விடவும் பிந்திய ஆண்டுகளில் நவீன உலகத்துக்கு பொருத்தமான வகையில் கட்டமைக்கப்பட்டுள்ள அரசாங்க தகவல் திணைக்களம் 2019 ஆண்டளவில் பல பிரிவுகளில் தனது சேவைகளை மேற்கொண்டு வருகிறது. அரசாங்க திரைப்படப் பிரிவு, புகைப்படப் பிரிவு, அபிவிருத்திப் பிரிவு, தெசத்திய சஞ்சிகைப் பிரிவு, புதிய ஊடகப் அலகு (www.news.lk), அரசாங்க வெளியீட்டுப் பணியகம், ஊடக அடையாள அட்டைப் பிரிவு, பிரச்சார பிரிவு, ஆராய்ச்சி மற்றும் விசாரணை பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கி அரசாங்க தகவல் திணைக்களம் செயற்பட்டு வருகிறது.

இந்த கருமங்கள் சமகால மாற்றங்களுக்கு உட்பட்டு தற்போது வரை வெற்றிகரமாக செயற்படுவதற்கு அரசாங்க தகவல் திணைக்களம் செயற்படுவதுடன், தற்போதுள்ள பொறிமுறை மூலம் அதற்கான இடம் கிடைத்துள்ளது என்பதும் அவதானிப்பின் போது தெளிவாகிறது.

அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிறுவனத் தலைவர்கள் ……..

1948 ஆண்டிலிருந்து அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிறுவனத் பிரதானிகளாக தகவல் அத்தியட்சகர், தகவல் பணிப்பாளர் மற்றும் தகவல் பணிப்பாளர் நாயகம் ஆகிய பெயர்களில் பதவி வகித்து பின்வரும் அலுவலர்கள் செயற்பட்டுள்ளார்கள்.

1948 - திரு. பி. நடேசன்

1949 - திரு. டி.ஐ.எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல

1950 - ரி.ரி.ஆர். விவியன் ஹொரயின்

1952 - டி.ஐ.எச்.ஏ.ஜே. ஹுலுகல்ல

1955 - திரு. நடேசன் பரராஜசிங்கம்

1956 - திரு. லயனல் பெரேரா

1957 - திரு. ஜீ.டப்.ஏ.எம். பெரேரா

1958 - திரு. ஜேம்ஸ் பெரேரா

1959 - திரு. ரி.எம். ஜயரத்தினம்

1960 - திரு. திலக் எரங்க குணரத்ன

1961 - திரு. டப்.எல் பெர்ணான்டோ

1962 - திரு. எஸ்.பி. சேனநாயக்க

1966 - திரு. டி. அலுவிஹாரே

1967 - திரு. பி.என். மெத்தெஹொட

1968 - கலாநிதி. எஸ்.எல்.பி. அமுணுகம

1972 - திரு. பி.எம். பிரேமவர்த்தன

1974 - திரு. டப்.ஆர்.ஜீ. திலகரத்ன

1977 - எஸ். அனுர குணசேகர

1983 - திருமதி. மானெல் அபேரத்ன

1990 - திரு. கே.எஸ். விமலசேன

1991 - திரு. கே.ஆர். எல். விஜேவர்த்தன

1992 - பேராசிரியர். சுனந்த மத்தும பண்டார

1994 - திரு. ஆரிய ரூபசிங்ஹ

2003 - திரு. கே.ஏ.பீ.ஜே.பி. ஜயசேகர

2004 - திரு. டப்.எம். பியசேன

2005 - திருமதி. காந்தி விஜேதுங்க

திரு. எஸ்.டீ. பியதாஸ

2006 - ரி.பி.கே. அனுஷ பெல்பிற்ற

தகவல் பணிப்பாளர் நாயகம் பதவியில் .....

2009.02.01 தொடக்கம் 2010.05.06 வரை – திரு. ரி.பி.கே. அனுஷ பெல்பிற்ற

2009.05.07 தொடக்கம் 2015.01.08 வரை – பேராசிரியர். ஆரியரத்ன அத்துகல

2015.01.13 தொடக்கம் 2015.05.07 (பதில்) – திருமதி. கே.டப்.ரி.என். அமரதுங்க

2015.05.08 தொடக்கம் 2017.06.02 வரை – கலாநிதி. தர்ஷனி குணதிலக்க

2016.06.06 தொடக்கம் 2017.09.29 வரை – கலாநிதி. ரங்க கலன்சூரிய

2017.10.13 தொடக்கம் 2018.10.26 வரை – சட்டத்தரணி. சுதர்ஷன குணவர்த்தன

2018.10.27 தொடக்கம் இற்றைவரை – திரு. நாலக்க களுவெவ

தூர நோக்கு

"பொறுப்புமிக்கதும் சுயாதீனதுமான ஊடக கலாசாரத்தினைப் பேணுதல்"

பணிக்கூற்று

"இலங்கையிலுள்ள ஊடக சுற்றுச்சூழலில் பரஸ்பரம் மிக்க தொடர்பாடலை பேணுவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் ஊடகக் கலாசாரத்தை மேம்படுத்தல். அரசாங்கத்தின் தூரநோக்கை செயற்படுத்தல் சரியான தகவல்களை வழங்குதல் பொதுமக்களின் உரிமைகளை தீர்மானிப்பதற்கான தகுந்த சந்தர்ப்பத்தினை வழங்குதல்"


நோக்கங்கள்

- அரசாங்கத்தின் அபிவிருத்தி திட்டங்கள், தேசிய ரீதியான முக்கியத்துவமிக்க நடவடிக்கைகள் தொடர்பில் பொதுமக்களை விழிப்புணர்வூட்டல்.
- மேம்பட்ட ஊடக கலாசாரத்தினை அபிவிருத்தி செய்தல்
- விசேட திட்டங்கள், அபிவிருத்தி திட்டங்களினை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்ட அரசாங்கத்தின் செய்திகள் மற்றும் ஆவணப் படங்களை காட்சிப்படுத்தலும் பாதுகாத்தலும்.
- உயரிய இலக்குகளை அடைவதற்காக மனிதவளங்கள் மற்றும் பௌதீக வளங்களை அபிவிருத்தி செய்தலும் மேம்படுத்தலும்.
- உலக தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கு ஏற்றாற் போல், (டிஜிட்டல்மயமாக்கம்) தகவல் தொழில்நுட்பத்தினை உலகமயமாக்கலின் அடிப்படையில் முகாமைத்துவம் செய்தல்.

1.3 பிரதான செயற்பாடுகள்

- தரநியமமான ஊடக மரபை உருவாக்குதல்.
- தகவல் அறியும் உரிமையை மேம்படுத்துவதற்காக அரசின் அபிவிருத்தி தொடர்பான செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்களை மக்களிடம் கொண்டு செல்லுதல்.
- ஊடக விசாரணைச் செயன்முறையை பலப்படுத்துதல்.
- நல்லாட்சி, நல்லிணக்கம், நிலைபெறுதகு அபிவிருத்தியை நிறுவி கருத்து கருத்துத் தெரிவிக்கும் சுதந்திரம் மற்றும் பேச்சு சுதந்திரத்தை உறுதிப்படுத்தல்.
- தொழில்வாண்மையான ஊடகவியலாளர்களை உருவாக்குதல்.
- ஊடகத்துறைக்குரிய ஆராய்ச்சி செயற்பாடுகள், அபிவிருத்தி மற்றும் திட்டமிடலை மேற்கொள்ளுதல்.

1.4. நிறுவனக்கட்டமைப்



** அலுவலரின் பதவி இரத்து செய்யப்படும் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவி பெயர்

1.5 திணைக்களத்தின் பிரதான பிரிவுகள்

01. நிர்வாக பிரிவு
02. கணக்குப் பிரிவு
03. பிரச்சாரப் பிரிவு
04. அபிவிருத்திப் பிரிவு
05. புதிய ஊடகப் பிரிவு
06. தெசத்திய மற்றும் தெசத்திய விநியோக பிரிவு
07. புகைப்படப் பிரிவு
08. அரசாங்க திரைப்படப் பிரிவு
09. மாவட்ட ஊடக அலகு
10. ஊடக அடையாள அட்டை பிரிவு
11. டிஜிற்றல் உட்கட்டமைப்பு வசதிகள் பிரிவு
12. அரசாங்க வெளியீட்டுப் பணியகம்
13. ஆராய்ச்சி மற்றும் ஊடக விசாரணைப் பிரிவு

1.6 அமைச்சு / திணைக்களம் / மாகாண சபையின் கீழ் உள்ள நிறுவனங்கள் / நிதியம்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் கீழுள்ள நிறுவனங்கள் எதுவுமில்லை.

1.7 வெளிநாட்டு நிதியுதவி பெறும் திட்டங்களின் தகவல்கள்

அரசாங்க தகவல் திணைக்களததின் வெளிநாட்டு நிதியுதவி கிடைக்கும் திட்டங்கள் எதுவுமில்லை.

02. அத்தியாயம்

முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

எப்போதும் புதிய தொழில்நுட்பங்களை இணைத்து தொடர்பாடலின் புதிய தொழில்நுட்ப முன்னுரிமைகளுக்கு இணையாக அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ தொடர்பாடலில் முதன்மையாளராக மாற்றமடைதல் அரசாங்க தகவல் திணைக்களத்தின் தொலைநோக்காகும்.

நவீன தொழில்நுட்பத்துடன் சமகாலத்தில் நாளாந்த செயற்பாடுகள் சமபிரதாய கருமங்களையும் தாண்டிய டிஜிற்றல் தொழில்நுட்பத்துடன் அனைத்து கருமங்களும் டிஜிற்றல்மயமாக்கலுக்கு (Digitalization) உட்பட்டு பணிகளை மிகவும் இலகுவாக மேற்கொள்ளும் டிஜிற்றல் தளத்தில் அரசாங்க தகவல் திணைக்களம் முன்னோக்கி அடியெடுத்து வைத்துள்ளது.

அனைத்து ஊடக நிறுவனங்களுடனும் வலையமைப்பை உருவாக்கி தகவல் மூலங்களாக அரசாங்க தகவல் திணைக்களம் செயற்பட்டு வருவதுடன், அரசாங்கத்தின் அனைத்து அலைவரிசைகளுக்கும் அபிவிருத்தி தகவல்களையும் வழங்குதல், அரச, தனியார் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களுக்கு வழங்குதலுக்கான அரச பொறிமுறையை அமுல்படுத்தப்படுகின்றது.

அத்துடன் தற்போது டிஜிற்றல் வெளியில் மக்களுக்கு நம்பகமான தகவல்களை வழங்குவதில் நிலவும் பாரிய சவாலை பொறுப்பேற்று மக்களுக்கு தகவல் தொடர்பாடல்களை மேற்கொள்கின்ற டிஜிட்டல் தளத்தை இவ்வாண்டில் உயர் மட்டத்துக்கு கொண்டுவருவதற்கு இயலுமை கிட்டியமை அரசாங்க தகவல் திணைக்களத்திற்குக் கிடைத்த குறிப்பான வெற்றியாகும்.

திணைக்களத்தின் கீழுள்ள இணையத்தளங்கள் மற்றும் சமூக ஊடக வலையமைப்புகளில் ஒரு ஆண்டு அளவான குறுகிய காலத்தினுள் சிறப்பான பல செயற்பாடுகளை மேற்கொண்டு மக்கள் மைய தகவல் வலையமைப்பை உருவாக்கும் இயலுமை ஏற்பட்டுள்ளது.

டிஜிற்றல்மயமாக்கலின் சிறப்பான சந்தர்ப்பங்கள்

சமூக ஊடக வலையமைப்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பொய்யான தகவல்கள் உலாவிவருவதுடன், அனைத்து சந்தர்ப்பங்களிலும் மக்களுக்கு கிடைக்கும் தகவல்களின் உண்மைத்தன்மை மற்றும் நம்பகத்தை ஏற்படுத்துதல் கட்டாயமானதாகும். அதற்காக தற்போது பெருமளவானோர் மத்தியில் பிரபலமாகவுள்ள சமூக ஊடகங்களைப் பாவித்து, நம்பகமான தகவல்களை டிஜிற்றல் வெளியில் மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்தல். அதற்கமைய, அரசாங்க தகவல் திணைக்களம் www.dgi.gov.lk, "Department of Government Information YouTube" அலைவரிசை மற்றும் Face Book மற்றும் www.newslk இணைய தளம், YouTube அலைவரிசை மற்றும் Face Book பக்கம், Twitter ஆகிய அனைத்து வலையமைப்புகள் ஊடாக நம்பகமான தகவல்கள் நேரடியாக மக்களுக்கு வழங்கப்படுகிறது.

அரசாங்க தகவல் திணைக்கள டிஜிற்றல்மயமாக்கலில் சிறப்பான வெற்றிகள்

	நிகழ்ச்சித்திட்டங்கள்	அமுல்படுத்துதல்
ஊடகங்களுக்கு வசதிகளை வழங்குதல்		
01	ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குவதற்காக cloud தளத்தைப் பயன்படுத்துதல்.	அரசாங்க தகவல் திணைக்களம் ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கும் மூலமாக செயற்பட்டு வருவதுடன், அது பாரம்பரிய முறையில் முன்னேறிச் சென்று காணொளிகள், ஒலி நாடாக்கள், புகைப்படங்கள், செய்தி அறிக்கைகள் அனைத்தும் அனைத்து ஊடகங்களுக்கு ஒரே வேளையில் துரிதமாக வழங்கப்படுகின்றது.
02	திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து ஊடகப் பதிவுகளையும் ஊடகங்களுக்கு துரிதமாக வழங்குதல்.	அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் அனைத்து ஊடகப் பதிவுகளையும் உள்ளடக்கிய அறிவித்தலுடன் காணொளிகள், ஒலிநாடாக்கள், புகைப்படங்கள் போன்ற அனைத்தையும் ஊடகங்களுக்கு வழங்குதல். இம்முறைமை ஆரம்பிக்கப்பட முன்னர் அதற்காக முறைமைப்படுத்தப்பட்ட முறைமை இருக்கவில்லை என்பதுடன், அந்த அனைத்து செயற்பாடுகளும் சிறப்பான ஒருங்கிணைப்பில் அனைத்து ஊடக நிறுவனங்களுடனும் சிறப்பான தொடர்பை பேணுவதற்கான இயலுமையை கொண்டிருத்தல்.
03	மின்னஞ்சல் System இனைத் தயாரித்தல்	எமது நாட்டின் அனைத்து ஊடகங்களும் அதாவது அச்சு, இலத்திரனியல், இணைய ஊடகங்கள், புதிய ஊடகங்கள், வெளிநாட்டு ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து ஊடகங்களுக்கும் 200 வரையான மின்னஞ்சல் மூலம் தகவல் பரிமாற்றம் செய்தல்.
04	அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் ஊடக அடையாள அட்டை வழங்குதல்	கோவைகளை பராமரித்து ஊடக அடையாள அட்டை வழங்கியமைக்கு மாற்றாக தரவுக் கட்டமைப்பை தயாரித்தல் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான கௌரவத்தை வழங்க நடவடிக்கை எடுத்தல்.

நேரடியாக மக்களுக்கு தகவல்களை வழங்குதல்		
	"Department of Government Information" YouTube ஒளிபரப்பை இயக்குதல்.	Department of Government Information You Tube மூலம் அலைவரிசை 2019 ஜனவரி மாதத்திலிருந்து இயங்கிய நிலையில் 12 நேயர்களை மட்டுமே கொண்டிருந்ததுடன், அந்த ஆண்டின் இறுதியில் 1000 த்துக்கு கூடுதலானோர் அதில் இணையும் நிலைக்கு முன்னேறியது. அதன்போது பல தலைப்புகளில் காணொளிகள் தயாரித்து வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதாவது, INFO News, INFO Highlights, உள்ளக (Inside), INFO News Parliament Highlights, Provincial Highlights, Taller, Documentary, Short video Reel, 2019 தேர்தலின் போது தேர்தல் திணைக்களத்தில் இருந்து உத்தியோகபூர்வ தேர்தல் பெறுபேறுகளை 24 மணி நேரமும் அதாவது, இறுதித் தேர்தல் பெறுபேறு வரை வழங்கியமை திணைக்களம் பெற்ற சிறப்பான வெற்றியாகும். அந்த சந்தர்ப்பத்தில் பெருமளவான உள்நாட்டு – வெளிநாட்டு மக்கள் இந்த YouTube அலைவரிசையுடன் இணைந்திருந்ததுடன் மக்களின் உயர் பாராட்டைப் பெற்றது.
	"Department of Government Information" Facebook பக்கத்தை இயக்குதல்.	2019 ஜனவரி மாதமளவில் இந்த face book பக்கத்தை 90,000 பயனர்கள் பார்வையிட்டு செய்திருந்தனர். அது 20,000 எண்ணிக்கையால் அதிகரித்திருந்தது. உள்ளடக்கங்கள் முறையான முறைமை ஊடாக தயாரித்தல் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்ட பின்னர், face book like, people reached, engage எண்ணிக்கை நாளாந்தம் உயர் மட்டத்துக்கு வந்துள்ளது. அதன் போது சமகால மற்றும் அபிவிருத்தி கொள்கைகள் அடங்கிய காணொளிகள் (You Tube அலைவரிசையின் அனைத்து காணொளிகள்) ஆக்கபூர்வமான post மற்றும் நிழற்படங்கள் சுருக்க விபரத்துடன் அதில் இற்றைப்படுத்தப்படுகிறது. 2019 ஜனாதிபதி தேர்தல் உத்தியோகபூர்வ பெறுபேறுகளின் ஒளிபரப்பு, உத்தியோகபூர்வ பெறுபேறுகளுடன் face book post வெளியிடுதல் இந்த பக்கத்தின் ஊடாகவும் மேற்கொள்ளப்பட்டதுடன், இலட்சக் கணக்கான மக்கள் அதனுடன் இணைந்திருந்தார்கள். தற்போது ஒரு வாரத்தில் இரு இலட்சத்துக்கு கூடுதலான reached எண்ணிக்கையை பேணும் ஆற்றல் கிடைத்துள்ளது.
	www.news.lk web இணையத்தளம்	அனைத்து சமகால மற்றும் அபிவிருத்தி செய்திகள் அனைத்தும் இந்த இணையதளத்தின் ஊடாக இற்றைப்படுத்தல் மும்மொழிகளில் மேற்கொள்ளப்படுவதுடன், 24 மணித்தியாலமும் இற்றைப்படுத்தப்படும் அரச உத்தியோகபூர்வ இணையத் தளமாகும். இந்த இணையதளத்தின் கீழ் Face book பக்கம், You Tube அலைவரிசை, twitter பக்கமும் இயங்குகிறது. 2019 ஜனாதிபதி தேர்தல் உத்தியோகபூர்வ தேர்தல் பெறுபேறுகளை இணையதளத்தில் இற்றைப்படுத்துதல், Face book பக்கம், You Tube அலைவரிசை ஊடாக ஒளிபரப்பு மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் அமைச்சரவை ஊடக சந்திப்பு உள்ளிட்ட விஷேட ஊடக சந்திப்புகள் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்படுதல்

		இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதற்கு உயர்ந்தளவு பதில்வினையாற்றல் கிடைத்து வருகிறது.
	தெசத்திய சஞ்சிகை	சமகால மற்றும் அபிவிருத்தி செய்திகள், வெளிநாட்டு செய்திகளை உள்ளடக்கிய 42 ஆண்டுகால வரலாற்றை கொண்ட மக்களுக்கு தகவல் வழங்கும் சஞ்சிகையை உரிய வகையில் இரண்டு வாரத்துக்கு ஒரு தடவை உரிய திகதியில் வெளியிட நடவடிக்கை எடுக்க முடிந்துள்ளது. இந்த சஞ்சிகையின் வினியோக செயற்பாடுகளை புதிய முறைமை ஊடாக மேற்கொள்வதற்கு தேவையான உடன்படிக்கை இலங்கை தபால் திணைக்களத்துடன் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது முதலாவது கட்டத்தில் 100 தபால் அலுவலகங்கள் ஊடாக இந்த சஞ்சிகையை மக்களுக்கு வழங்குவதற்கான வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.
ஊடகக் காப்பகக் கட்டமைப்பை நடைமுறைப்படுத்தல்		
	டிஜிற்றல் காப்பகக் கட்டமைப்பை நிறுவுதல்.	இத்திணைக்களத்துக்கு சொந்தமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திரைப்படங்கள், காணொளிகள், புகைப்படங்கள் போன்றவற்றை டிஜிற்றல் தொழில்நுட்பத்துக்கு மாற்றும் (Convert To Digital) திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தற்போது 100 திரைப்படங்கள் டிஜிற்றல் தொழில்நுட்பத்துக்கு convert செய்யப்பட்டு, காப்புக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும், டிஜிற்றல் காப்பகக் கட்டமைப்பை நிறுவுதலும் இவ்வாண்டில் மேற்கொள்ளப்படும் முதன்மையான பணியாகும் என்பதுடன், அதன் விசேடமான காணொளிகள், புகைப்படங்களை காப்புச் செய்தல் அன்றாடம் மேற்கொள்ளப்படும் பணிகளாக இவ்வாண்டில் மாறியுள்ளது.

ஊடகங்களுக்கு தகவல்களை வழங்கும் வசதிகளை முறையாக விரிவாக்குதல்

சிறந்த சமூக நிலைபேற்றுக்காக ஊடகத் துறையின் பொறுப்புகள் மற்றும் கொள்கைகள் எப்போதும் முக்கியமாக அமைவதால் நம்பகமான, உண்மைத் தகவல்களை அறிக்கையிடுவதற்காக ஊடக நிறுவனங்கள் அதிகதிகமான தகவல்களைக் கொண்டிருத்தல் இன்றியமையாததாகும். அதற்கமைய, அரசின் அபிவிருத்தி மற்றும் சமகாலத் தகவல்கள் முறையான பொறிமுறை மூலம் ஊடகங்களுக்கு தொடர்பூட்டும் செயற்திட்டத்தை அரசாங்கத் தகவல் திணைக்களம் மூலம் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய Cloud தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஊடக நிறுவனங்களுக்கு காணொளிகள், புகைப்படங்கள், ஊடக அறிவித்தல்கள் போன்ற அனைத்தையும் விரைவாக வழங்குவதற்கான முறைமைப்படுத்தப்பட்ட முறைமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விசேட வெற்றிகள்,

அரசாங்க தகவல் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்ட பணிகளை பாராட்டுவதற்கான 2019 ஆண்டில் பின்வரும் விருதுகளை பெற்று, விஷேட வெற்றிகளை பெற்றது.

- சுகாதார மேம்படுத்தலுக்கான ஊடக விருது விழா – 2019
- இணைய ஊடக முழுமைத் திறமை விருது - “Department of Government Information” You Tube அலைவரிசை

- சஞ்சிகை ஊடகத்துக்கான திறமை விருது – தெசத்திய சஞ்சிகை
- இணைய ஊடகத்துக்கான திறமை விருது – www.news.lk

சவால்கள் மற்றும் எதிர்கால இலக்குகள்

அரச கொள்கைகள், அரச அபிவிருத்தி செயன்முறைகள் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவத்துடன் சமகால செயற்பாடுகள் மற்றும் மக்களுக்காக அரசினால் முன்னெடுக்கப்படும் பணிகள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தும் இத்திணைக்களத்தின் முக்கிய பொறுப்பும், பணியுமாகும். அத்துடன், உலக தொழில்நுட்ப போக்குகளுக்கு இணங்கி தகவல் தொழில்நுட்ப செயன்முறையை முகாமைத்துவத்தைச் செய்து, சுதந்திரமான மற்றும் பொறுப்பான உயரிய ஊடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் தலைமைத்துவம் வழங்குவதே முக்கிய நோக்கமாகும்.

பாதுகாப்பான நாடு மற்றும் சௌபாக்கியமான தேசத்தை உருவாக்க அடிப்படையாகும் வகையில் மக்கள் சரியான தகவல்கள் மற்றும் அறிவை ஏற்படுத்துவதற்காக ஊடகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பொறுப்பை நிறைவேற்றுவதற்கான தெளிவான ஊடக கொள்கையை சமூகத்தில் உருவாக்குவதற்கு முன்னோடியாக செயற்பட எதிர்பார்க்கப்படுகிறது.

அதன்போது 2020 ஆண்டில் பின்வரும் அடிப்படை நிகழ்ச்சிகள் தொடர்பில் அரசாங்க தகவல் திணைக்களம் முன்னுரிமை வழங்கியுள்ளது.

01. "ஊடக நிலையம் (Press Clubs) நிறுவுதல்"

01. அரசாங்க தகவல் திணைக்களத்தினால் திட்டமிடப்பட்டு, திணைக்கள காணியில் நிர்மாணிக்கப்படவுள்ள ஊடகவியலாளர்களுக்கு வசதிகளை வழங்கும் நிலையத்தை (Media Personal Facilitation Center) மேலும் மேம்படுத்தி மேல் மாகாணத்துக்கான பிரதான ஊடக நிலையம் (Press Club) நிறுவுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. அதில் 50 ஊடகவியலாளர்களுக்கு தேவையான வசதிகள் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

- மதிப்பீடு செய்யப்பட்ட செலவு - 40 மில்லியன் ரூபா
- காலப்பகுதி 07 மாதங்களில் நிர்மாணிக்க எதிர்பார்க்கப்படுகிறது.
- தற்போதைய நிலை – கட்டிடத்தை திட்டமிடுதல் மற்றும் விலைமனு கோரல் நிறைவு செய்யப்பட்டுள்ளது.
- ஒப்பந்தம் வழங்குதல் - 2020 பெப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்படவுள்ளது.
- நிதி ஒதுக்கீடு – 2020 இடைக்கால செலவு மதிப்பீட்டு கணக்கில் 4 மில்லியன் கிடைத்துள்ளது. ஒப்பந்தம் வழங்கலுக்கான எஞ்சிய 06 மில்லியன் தொகை அடுத்த இடைக்கால கணக்கு மூலம் வழங்கப்பட்டுள்ளது.

02. **மாகாண ஊடக நிலையங்களை (Press Clubs) நிறுவுதல்.**

மாகாண மட்டத்தில் இந்த வசதிகளை நிறைவு செய்வதற்கு பொருத்தமான இடங்களை அடையாளம் காணுமாறு ஏற்கனவே அரசாங்க அதிபர்கள் மற்றும் அரசாங்க தகவல் திணைக்களத்தின் மாவட்ட ஊடக அலகுகளின் அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய தற்போது மாத்தறை நிலையத்துக்கான இடம் அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்காக அனைத்து மாகாணங்களிலும் பொருத்தமான இடங்களை தெரிவு செய்வதற்கான பொதுவான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அதற்கான செலவு மதிப்பீடு செய்யப்பட்ட பின்னர் அடுத்த வரவுசெலவு திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

02. "உயர் தொழில்வாண்மை திறனுள்ள ஊடகவியலாளர்களை உருவாக்குதல்"

01. புதிய அரச கொள்கைகளுக்கு அமைய, ஊடகவியலாளர்களின் தொழில்வாண்மை அறிவை அபிவிருத்தி செய்வதற்காக அரச அனுசரணையுடன் ஊடக பயிற்சி நிறுவனம் கௌரவ தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி. பந்துல குணவரத்தன மற்றும் தகவல், தொடர்பாடல் மற்றும் ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகிய அமைச்சர்களின் ஆலோசனைக்கு அமைய தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சின் செயலாளர் மற்றும் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஆகியோரின் வழிகாட்டலுக்கு அமைய அரசாங்க தகவல் திணைக்களம் தொழில்வாண்மை மத்திய பயிற்சி நிலையத்தை நிறுவுவதற்கான ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, ஊடகத்துறை தொடர்பான ஒரு ஆண்டு பயிற்சி காலத்தில் ஊடகத்துறை டிப்பிளோமா பாடநெறி மற்றும் மாதாந்த ஊடக சான்றிதழ் பாடநெறி, மும்மாத ஊடகவியலாளர் மற்றும் நிழற்பட, வீடியோ பாடநெறிகளை ஆரம்பிப்பதற்கான பாடவிதானம் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த கருமம் அரசாங்க தகவல் திணைக்களத்தின் தகவல் பணிப்பாளர் நாயகத்தின் ஆலோசனைக்கு அமைய பின்வரும் ஆலோசனை குழுவினால் நிறைவேற்றப்படுகிறது.

1. பேராசிரியர். கமல் வலேகொட
2. கலாநிதி. தர்மகீர்த்தி ஸ்ரீ ரஞ்ஜன்
3. உதவிப் பணிப்பாளர் திரு. ஹஷர். பி. அபேகோன்

02. சிறந்த ஊடகக் கலாச்சாரத்தை உருவாக்கி தரமான ஊடக தொழில்வாண்மையை மேம்படுத்துவதற்காக பல்கலைக்கழக சமூகம், ஊடகவியலாளர்கள் மற்றும் புத்திஜீவிகளை இலக்காகக் கொண்டு உயர் கல்வி மட்டத்தில் ஊடக சஞ்சிகை (ஊடக சான்றிதழ் மற்றும் மாதாந்த சஞ்சிகை) அச்சிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

03."இருபத்தோராம் நூற்றாண்டுக்குப் பொருத்தமான சமூகத்தை உருவாக்குவதற்காக பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரத்தை நாம் உயர்வாக ஏற்றுக் கொள்வதுடன், அவற்றைப் பாதுகாப்பதற்காக அதிகளவு செயற்படுகிறது. அதற்காக ஊடக நிறுவனங்கள் மற்றும் அவற்றில் சேவையில் ஈடுபட்டுள்ள தொழில்வாண்மையாளர்களின் பணிகளுக்குத் தேவையான சுதந்திரமான மற்றும் சிக்கலற்ற சுற்றாடலை உருவாக்குதல் அரசின் பொறுப்பாக கருதப்படுகிறது."

01. சிறந்த ஊடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக அரச ஊடக நிறுவனங்களால் நிறைவேற்றப்படும் தேசிய பொறுப்புகள் மற்றும் அரசின் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லும் போது அரச ஊடக நிறுவனங்களின் தேசிய பணிகளை மதிப்பீடு செய்வதற்காக தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சின் தலைமையில் அரசாங்க ஊடக ஒருங்கிணைந்த தேசிய ஊடக ஆராய்ச்சி அலகை நிறுவுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தை பெறுவதற்கான ஆரம்ப செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

02. பாடசாலை பாடவிதானத்தில் ஊடக பாடம் அறிமுகம் செய்யப்பட்டு இரண்டு தசாப்த காலம் கடந்துள்ளது. இருந்த போதிலும், தற்போது பாடசாலைக் கட்டமைப்பில் முறைசாரது அமுல்படுத்தப்படும் பாடசாலை ஊடக கழக நிகழ்ச்சித்திட்டத்தை முறைமைப்படுத்தி பாடசாலைகளில் ஊடக பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களின் தொழில்வாண்மை அறிவை அதிகரித்து பாடசாலை ஊடக விரிவுரையாளர்கள் அரசாங்க தகவல் திணைக்களத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றனர். (இந்த நிகழ்ச்சித்திட்டம் தற்போது செயற்படுகிறது.)

பாடசாலை ஊடக கழகத்தை முறைமைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலை ஊடக கழகங்களை பதிவு செய்தல் மற்றும் வினைத்திறனான ஊடகவியலில் ஈடுபடும் பாடசாலை பிள்ளைகளின் திறமை மற்றும் அறிவை மேம்படுத்துவதற்காக பல்வேறு

நிகழ்ச்சித்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (இந்த நிகழ்ச்சித்திட்டம் தற்போது செயற்படுகிறது.)

பாடசாலை ஊடக கழகங்களை முறையாக செயற்படுத்தும் தேசிய மற்றும் ஏனைய பாடசாலைகளை தெரிவுசெய்து ஊடக அமைச்சு மற்றும் தகவல் திணைக்களத்தின் அனுசரணையுடன் 500 சுவர் பத்திரிகைகள் முதலாவது கட்டத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. தொழில்வாண்மை மிக்க தரமான ஊடக சேவையை உருவாக்குவதற்காக பல்கலைக்கழக ஊடக பிரிவுகளை ஒருங்கிணைத்து அறிவோர் கலந்துரையாடல் தேசிய மற்றும் சர்வதேச வளவாளர்கள் மூலம் symposium ஏற்பாடு செய்தல்.

04. டிஜிற்றல்மயமாக்கல் - குறுங்கால அணுகுமுறை

"சமூக ஊடகங்கள் உள்ளிட்ட புதிய ஊடக பாவனை மற்றும் நடத்தை தொடர்பான அறிவு, புரிதல் மற்றும் தொடர்பாடல் தந்திரோபாயங்களை சமூகமயப்படுத்தவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்". அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ பிரதானியாக அரச தொடர்பாடல் பணியை மேலும் விரிவாக்கி நவீன சமூக ஊடக பாவனை உயர்வான பங்களிப்பு வழங்கி, அரசின் அபிவிருத்தி செய்திகள் மற்றும் அரசாங்கத்தின் முக்கியமான தகவல்களை சமூக ஊடகங்கள் மூலம் மக்கள் மயப்படுத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

- சமகால மற்றும் அபிவிருத்தி தகவல்கள் அடங்கிய பேஸ்புக் பக்கத்தை புதிய தோற்றத்தில் முன்வைத்தல்.
- அமைச்சரவை ஊடக சந்திப்பு உள்ளிட்ட விஷேட ஊடக கலந்துரையாடல், தேசிய விழாக்களை நேரடி ஒளிபரப்பு செய்தல்.
- Face book மற்றும் you tube பயனர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தல்.
- 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைப் பிரகடனம் தொடர்பில் ஜனாதிபதி கோட்பாய ராஜபக்ஸ அவர்கள் ஆற்றிய உரை தொடர்பான சாராம்ச வீடியோவை சமூக ஊடகங்கள் வாயிலாகப் பிரச்சாரம் செய்தல்.
- ஒவ்வொரு வாரமும் நடைபெறும் அமைச்சரவையின் ஊடக சந்திப்பின் விசேட விடயங்கள் தொடர்பான சாராம்ச வீடியோக்கள் மற்றும் ஆக்கபூர்வமான பகிர்வுகளுடன் Face book மற்றும் You tube ஊடாக பிரச்சாரம் செய்தல்.
- அனைத்து அமைச்சுக்களை இணைத்து நாளாந்தம் தயாரிக்கப்படும் செய்தி காணொளிகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.
- அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான தகவல்களை பெறுவதற்காக சமூக ஊடகங்கள் மூலம் Face book Closed Group (DGI Media Coordination) தயாரித்து, அதன் மூலம் தகவல்களை பெறுதல் மற்றும் அந்த தகவல்களை ஏனைய ஊடகங்களுக்கு வழங்கும் செயற்திட்டம்.
- ஊடகங்களுக்கு தகவல்களை வழங்குதலை முறைமைப்படுத்துவதற்காக cloud முறைமை தயாரிக்கப்பட்டிப்பதால், திணைக்களத்தால் பதிவு செய்யப்படுகின்ற அனைத்து நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய தகவல்களை துரிதமாக ஊடகங்களுக்கு வழங்கி காணொளிகள், நிழற்படங்கள், செய்தி அறிவித்தல்கள் போன்றவற்றின் மூலம் வெளியிடக் கூடியதாக இருத்தல்.

நாலக்க களுவெவ,
அரசாங்க தகவல் பணிப்பாளர் நாயகம் / கணக்கீட்டு அலுவலர்

அத்தியாயம் - 03

2019 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான முழுமையான நிதி செயலாற்றுகை

2019 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான முழுமையான நிதி செயலாற்றுகை

3.1 நிதி செயலாற்றுகைக் கூற்று

ஏசீஏ - எப்

2019 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த காலப்பகுதிக்கான நிதி செயலாற்றுகை

ரூ.

வரவுசெலவு திட்டம் 2019		பதிவு	2019	உண்மை 2018	
-	வருமான பெறுகை.				
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ -1
-	உள்நாட்டு பண்டங்கள் மற்றும் சேவைகள் வரி	2	-	-	
-	சர்வதேச வர்த்தக வரி .	3	-	-	
-	வரி அல்லாத வருமானங்கள் மற்றும் பிற	4	-	-	
-	மொத்த வருமான பெறுகை (அ)		-	-	
-	வருமானம் அல்லாத பெறுகை				
-	திறைசேரி கட்டுநிதி		310,930,000	313,920,000	ஏசீஏ -3
-	வைப்புகள்		1,302,547	12,885,524	ஏசீஏ -4
-	முற்பண கணக்கு		12,517,778	10,198,266	ஏசீஏ - 5 /5 (ஏ) 5/ (பி)
-	பிற பெறுகைகள்		21,131,019	19,355,618	
-	மொத்த வருமானமல்லாத பெறுகை (ஆ)		**345,881,344**	**356,359,408**	
-	மொத்த வருமான பெறுகை மற்றும் மொத்த வருமானமற்ற பெறுகை இ = (அ) + (ஆ)		**345,881,344**	**356,359,408**	
	கழிவிடப்பட்ட : செலவுகள்				
-	மீண்டெழும் செலவுகள்				

135,080,000	சம்பளம், வேதனங்கள் மற்றும் பிற ஊழியர் அனுகூலங்கள்	5	133,366,714	123,629,519	
119,947,000	பிற பண்டங்கள் மற்றும் சேவைகள்	6	118,544,529	389,689,937	ஏசீஏ -2 (ii)
1,724,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	1,723,193	1,935,467	
-	வட்டி செலுத்துதல்	8	-	-	
-	பிற மீண்டெழும் செலவுகள்	9	-	66,232	
256,751,000	**மொத்த மீண்டெழும் செலவு (இ)**		**253,634,436**	**515,321,155**	
	மூலதன செலவு				
19,416,000	மூலதன சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல்	10	15,774,039	10,653,092	
58,133,000	மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல்	11	45,571,377	26,633,580	
-	மூலதன மாற்றுதல்கள்	12	-	-	ஏசீஏ -2(ii)
-	மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல்	13	-	-	
4,000,000	ஆற்றல் விருத்தி	14	1,483,407	7,998,910	
-	பிற மூலதன செலவுகள்	15	-	-	
81,549,000	**மொத்த மூலதன செலவு (ஈ)**		**62,828,823**	**45,285,582**	
-	பிரதான லெஜர் செலவு (உ)		**13,627,757**	**27,694,260**	
-	வைப்பு செலுத்துதல்		572,382	12,677,878	ஏசீஏ -4
-	முற்பணம் செலுத்துதல்		13,055,375	15,016,382	ஏசீஏ -5/5 (ஏ) 5/ (பி)
-	மொத்த செலவு ஊ = (இ + ஈ- உ)		330,091,016	588,300,997	
-	2019 டிசம்பர் 31 திகதியில் கட்டுநிதி மீதி எ (இ ஊ)		**15,790,328**	**231,941,589**	

3.2 நிதி நிலை தொடர்பான கூற்று

(எஸ்ஏ - பி

2019 டிசம்பர் 31 திகதியில் நிதி நிலை தொடர்பான கூற்று

	பதிவு	2019 (ரூ.)	உண்மை 2018 (ரூ.)
நிதியல்லாச் சொத்துக்கள்			
சொத்துக்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்	ஏசீஏ-6	1,762,938,741	1,588,921,581

நிதிச் சொத்துக்கள்			
முற்பணக் கணக்கு	ஏசீஏ -5/5(ஒ)	36,964,465	36,426,868
காசு மற்றும் காசுக்குச் சமமானவை	ஏசீஏ -3	168,073	-
மொத்த சொத்துக்கள்		**1,800,071,279**	**1,625,348,449**
தேறிய சொத்துக்கள் / ஒப்புரவு			
தேறிய சொத்துக்கள்		28,033,141	28,225,710
ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண இருப்பு		1,762,938,741	1,588,921,581
வாடகை மற்றும் முற்பண இருப்பு	ஏசீஏ -5(பீ)	-	-
நடைமுறைச் சொத்துக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ -4	8,931,324	8,201,158
கட்டுநிதி மீதி	ஏசீஏ -3	168,073	-
மொத்த பொறுப்புகள்		**1,800,071,279**	**1,625,348,449**

06 பக்கம் தொடக்கம் 71 ஆம் பக்கம் வரையான மாதிரி படிவங்களில் சமர்ப்பிக்கப்படும் கணக்கு தகவல்கள் மற்றும் பதிவு பக்க இலக்கம் 72 தொடக்கம் 90 வரை அடங்கும் பதிவு விபரங்களும் இந்த இறுதி கணக்குகளில் உள்ளடங்கும் பகுதிகளாகும். இந்த நிதிக் கூற்று தயாரித்தல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு ஏற்புடையதாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் போது நிதிக் கூற்றுகளின் பதிவுகள் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள வகையில் மிகவும் பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் பாவிக்கப்பட்டுள்ளது. மேற்குறித்த இறுதி கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் அவற்றுக்குரிய கணக்கு பதிவுகள் மற்றும் ஏனைய கணக்கு தகவல்கள் திறைசேரி கணக்கு புத்தகங்களுடன் ஒப்பீடு செய்யப்பட்டள்ளது எனவும் அவை அந்த தொகைகளுடன் இணங்குகின்றன எனவும் இத்தால் உறுதி செய்கிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: டப்ள்யு. ஏ. சூலானந்த பெரேரா
பதவி : செயலாளர், தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு
திகதி : 2020.02. 25

W. A. CHULANANDA PERERA
Secretary
Ministry of information and Mass Media
Postal Headquarters Building
310, D.R. Wijewardana Mawatha,
Colombo 10.

கணக்கீட்டு உத்தியோகத்தர்
பெயர்: நாலக கலுவெவ
பதவி : தகவல் பணிப்பாளர் நாயகம்
திகதி : 2020.02. 20

Nalaka Kaluwewa
Director General of Government Information
Department of Government Information

பிரதான கணக்காளர்
பெயர் : எச் ஏ யு ஜயலத்
திகதி : 2020.02. 17

H. A. U. JAYALATH
Chief Accountant
Department of Government Information
163, Kirulapona Avenue,
Colombo 05.

3.3 காசுப்பாய்ச்சல் கூற்று

ஏசீஏ – சீ

2019 டிசம்பர் 31 திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

உண்மை

	2019 (ரூ.)	2018 (ரூ.)
<u>தொழிற்பாட்டு நடவடிக்கைகளாலான காசுப்பாய்ச்சல்</u>		
மொத்த வரிப் பெறுகை	-	-
கட்டணம், மிகைக் கட்டணம், அபராதம் மற்றும் உரிம இலாபம்	-	-
	-	-
வருமானம் அல்லாத பெறுகை	281,860	327,241,551
பிற தலைப்புகளில் சேர்க்கப்பட்ட வருமானம்	13,885,179	-
கட்டுநிதிப் பெறுகை	310,930,000	-
தொழிற்பாட்டு நடவடிக்கைகளாலான காசுப்பாய்ச்சல் (அ)	**325,097,039**	**327,241,551**
<u>கழிவிடப்பட்ட – நிதிச் செலவுகள்</u>		
தனிநபர் சம்பளங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள்	230,937,450	267,254,968
மானியங்கள் மற்றும் மாற்றுதல் செலவுகள்	1,723,193	1,935,467
பிற செலவுத் தலைப்புகளுக்காக செய்யப்பட்ட செலவுகள்	18,792,295	-
திறைசேரிக்கு செலுத்தப்பட்ட கட்டுநிதி	-	-
தொழிற்பாட்டு நடவடிக்கைகளுக்கு செலவான காசுப்பாய்ச்சல் (ஆ)	**251,452,938**	**269,190,435**
தொழிற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான தேறிய காசுப்பாய்ச்சல் இ = (அ) – (ஆ)	**73,644,101**	**58,051,116**
<u>முதலீட்டு செயற்பாடுகளால் உருவான காசுப்பாய்ச்சல்</u>		
வட்டி	-	-
பங்குலாபம்	-	-
உரித்து நீக்கும் ஒதுக்கீடு மற்றும் பௌதீக சொத்துக்கள் விற்பனை	-	-
உப கடன்களை அறவிடுதல்	-	-
முற்பணங்களை அறவிடுதல்	452,413	275,088

முதலீட்டு செயற்பாடுகளால் உருவான காசுப்பாய்ச்சல் (இ)	**452,413**	**275,088**
கழிவிடப்பட்ட – நிதி செலவிடுதல்		
பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் பிற முதலீடுகளை கையகப்படுத்துதல் முற்பண செலுத்துகை	62,281,390	44,157,821
	11,331,894	13,970,719
முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவான மொத்த நிதிப் பாய்ச்சல் (ஈ)	**73,613,284**	**58,128,540**
முதலீட்டு செயற்பாடுகள் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சல் (உ) = (இ) + (ஈ)	**(73,160,871)**	**(57,853,452)**
தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகள் மூலம் உருவான தேறிய காசுப் பாய்ச்சல் (உ) = (இ) + (ஈ)	**483,230**	**197,664**
நிதிச் செயற்பாடுகள் மூலம் உருவான காசுப்பாய்ச்சல் (உ) = (இ) + (ஈ)		
உள்நாட்டு கடன் பெறுதல்	-	-
வெளிநாட்டு கடன் பெறுதல்	-	-
கொடைகள் கிடைத்தல்	-	-
வைப்பு கிடைத்தல்	257,225	12,460,214
நிதி செயற்பாடுகள் உருவான மொத்த காசுப்பாய்ச்சல் (எ)	**257,225**	**12,460,214**
கழிவிடப்பட்ட – நிதி செலவிடுதல் :		
உள்நாட்டு கடன் மீளச் செலுத்துதல்	-	-
வெளிநாட்டு கடன்	-	-
வைப்பு செலுத்துதல்	572,382	12,657,878
நிதி செயற்பாடுகளுக்கு செலவான மொத்த காசுப்பாய்ச்சல் (ஏ)	**572,382**	**12,657,878**
நிதி செயற்பாடுகள் உருவான காசுப்பாய்ச்சல் (ஏ)	**(315,157)**	**(197,664)**
நிதியின் தேறிய மாற்றங்கள்	**168,073**	**-**

ஜனவரி 01 திகதியில் ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31 திகதியில் இறுதி காசு மீதி	**168,073**	-

3.4 நிதிக் கூற்றுக் குறிப்பு

அறிக்கைப்படுத்துவதற்கான அடிப்படை

(1). **அறிக்கையிடல் காலப்பகுதி**

2019 ஜனவரி 01 திகதி தொடக்கம் டிசம்பர் 31 திகதி வரையான காலப்பகுதி இந்த நிதிக்கூற்றுக்கு உரிய அறிக்கையிடல் காலப்பகுதியாகும்.

(2). **அளவிடல் அடிப்படை**

நிதிக்கூற்று வரலாற்று கிரயத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், சில சொத்துக்களின் வரலாற்று கிரயம் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதிக்கு மேம்படுத்தப்பட்டுள்ளது. வேறு வழிகளில் காட்டப்பட்டிராத சந்தர்ப்பங்களில் கணக்கு தயாரித்தல் மேம்படுத்தப்பட்ட நிதி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது.

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களின் பெறுமதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

(3). **வருமானத்தை அடையாளம் காணுதல்**

பரிமாற்ற மற்றும் பரிமாற்றம் அல்லாத வருமானங்கள் அவை கிடைக்க வேண்டிய காலப் பகுதி கருத்தில் கொள்ளப்படாமல் நிதி கிடைக்கும் காலப்பகுதியில் வருமானமாக அடையாளம் காணப்படுகிறது.

(4). **ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை அடையாளம் காணுதல் மற்றும் அளவிடுதல்**

சொத்துக்களுக்கு உரிய எதிர்கால பொருளாதார நன்மைகள் நிறுவனத்துக்கு கிடைக்குமென உறுதி செய்யப்பட்டுள்ள போதும், அச்சொத்துக்களை நம்பகமாக அளவிடலாம் எனின், அச்சொத்துக்கள், ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக அடையாளம் காணப்படும்.

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் அடையாளம் காணப்படுவதுடன், கிரய மாதிரிக்கு உரியதல்லாத சந்தர்ப்பத்தில் மீள மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமான பாவிக்கப்படுகிறது.

(5). **ஆதனங்கள், கிரயம் மற்றும் உபகரணங்கள் ஒதுக்கு**

இந்த ஒதுக்கு கணக்கு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுடன் தொடர்புடைய கணக்குகளாகும்.

(6). **<u>காசு மற்றும் காசுக்குச் சமமானவை</u>**

2019 டிசம்பர் 31 திகதியில் கையிலுள்ள உள்நாட்டு பாவனை நாணய தாள்கள் மற்றும் நாணய குற்றிகளிலான காசு மற்றும் காசுக்குச் சமமானவைகளை கொண்டதாகும்.

3.5 வருமான திரட்டல் செயலாற்றுகை

ரூ.,000

வருமான குறியீடு	வருமான குறியீட்டின் விபரம்	வருமான மதிப்பீடு		திரட்டப்பட்ட வருமானம்	
		நிதி மதிப்பீடு	இறுதி மதிப்பீடு	தொகை (ரூ.)	இறுதி வருமான மதிப்பீடு % ஆக
20.06.02.01	வாகனங்கள்	-	2,090	2,089.4	99
20.06.02.02	பிற	-	139	145.0	104
20.02.01.01	அரச கட்டிடங்கள் மற்றும் வீடுகளுக்கான வாடகை	-	33.6	36.33	108
20.02.01.99	அரச சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருமானம் - வாடகை - ஏனைய வாடகைகள்	-	-	-	-
20.02.02.99	வட்டி - பிற	1,000	1,000	1,485.3	148
20.03.01.00	விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - திணைக்கள ரீதியான விற்பனை	1,200	1,200	3,122.3	260
20.03.02.99	விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் நிர்வாக ரீதியான கட்டணங்கள் மற்றும் நானாவித செலுத்துகை	-	130	241	185
20.03.03.02	விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - அபராதம் மற்றும் அரசுடமையாக்கல் - பிற	-	-	-	-
20.03.99.00	விற்பனைகள் மற்றும் கட்டணங்கள் - பிற பெறுகைகள்	900	900	683.4	75
20.05.99.00	விலகல்களின் ஒதுக்கீடு, தேசிய லொத்தர் சபை மற்றும் ஏனைய உரித்தளித்தல்கள்	-	-	-	-

3.6 ஒதுக்கீடு செய்யப்பட்ட ஒதுக்கீட்டை பாவித்தலின் செயலாற்றுகை

ரூ ,000

நிதி ஒதுக்கீட்டு வகை	செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு		உண்மை செலவு	பாவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, நிறைவு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் % ஆக
	நிதி ஒதுக்கீடு	இறுதி நிதி ஒதுக்கீடு		
மீண்டெழும்	ரூ. 226,650.00	ரூ..256,751.00	ரூ..253,634.00	98.7
மூலதன	ரூ. 57,150.00	ரூ. 81,549.00	ரூ. 62,879.00	77.1

3.7 நி.ஒ 208 க்கு அமைய, ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இந்த திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள்

ரூ. ,000

தொ. இல	நிதி ஒதுக்கீடு கிடைத்த அமைச்சு / திணைக்களம்	நிதி ஒதுக்கீட்டு குறிக்கோள்	நிதி ஒதுக்கீடு		உண்மைச் செலவு	பாவிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு, நிறைவு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு, வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் % ஆக
			ஆரம்ப நிதி ஒதுக்கீடு	இறுதி நிதி ஒதுக்கீடு		
01.	ஊடக அமைச்சு	வீத வரி செலுத்துதல்	-	560,844.00	560,844.00	100
		அமைச்சின் வரிப் பிரிவு திணைக்கள கட்டிடத்தில் இயக்குவதற்கான மின் கட்டணத்தின் 3% செலுத்துதல்		105,698.76	79,071.83	74.8
02.	அரச அச்சக திணைக்களம்	அவர்களது அச்சகப் பிரிவு திணைக்கள கட்டிடத்தில் இயக்குவதற்கான மின் கட்டணத்தின் 25% செலுத்தவதற்கு	400,000.00	800,000.00	1,028,109.05	85.7
03.	கொள்கைத் திட்டமிடல், பொருளாதார செயற்பாடுகள்,	தற்காலிக கொள்கை திட்டமிடல் மற்றும் பொருளாதார	-	389,770.53	389,770.53	100

	சிறுவர் மற்றும் இளைஞர், கலாச்சார விவகார அமைச்சு	விவகார அமைச்சுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள திரு. எல்.ஏ. ரோஹண அவர்களது சம்பளம் செலுத்துவதற்காக				
04.	தேர்தல்கள் ஆணைக்குழு	தேர்தல் கடமை செலவு செய்வதற்காக	-	1,199,110.00	1,184,010.89	98.7
05.	பௌதீக, போசாக்கு மற்றும் உள்நாட்டு மருத்துவ அமைச்சு	SEITEM பிரச்சார விளம்பரத்துக்கு செலுத்துவதற்கு	-	13,000,000.00	12,696,425.50	97.7
06.	பாதுகாப்பு அமைச்சு	தேசிய ஊடக நிலையத்திலிருந்து திணைக்களத்துக்கு நியமனம் செய்யப்பட்ட அலுவலரின் சம்பளம் செலுத்துதல்	-	2,000,000.00	1,069,655.00	53.5
07.	நிதி அமைச்சு	அவர்களது வரிப் பிரிவு திணைக்கள கட்டிடத்தில் இயக்குவதற்காக 3% மின் கட்டணம் செலுத்துவதற்கு, அதற்கு முன்னர் நிதி மற்றும் ஊடகத்துறை ஒரே அமைச்சாக இருந்தது. (2019.01.01 – 2019.07.31)	-	150,000.00	44,301.24	29.5
			400,000.00	18,205,423.29	17,052,188.04	91.7

3.9 நிதியல்லா சொத்துக்களை அறிக்கைப்படுத்துவதில் செயலாற்றுகை

ரூ. 000

சொத்துக் குறியீடு	குறியீட்டு விபரம்	31.12.2019 திகதியில் பொருட் கணக்கெடுப்பு அறிக்கைக்கு அமைய	31.12.2019 திகதியில் நிதிநிலை அறிக்கைக்கு அமைய	எதிர்காலத்தில் கணக்கு வைக்கப்படவுள்ள	முன்னேற்றம் % ஆக அறிக்கை செய்தல்
9151	கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள்	2019 ஆண்டுக்குரிய செயலாற்றுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப் படுகின்றன	300,848,000.00	-	99%
9152	இயந்திரங்கள் காணி				
9153			197,655,240.28		
9154	தொட்டுணரா சொத்துக்கள்		1,227,750,000.00		
9155	உயிரியல் சொத்துக்கள்		-		
			-		
9160	மேற்கொள்ளப்படும் வேலைகள்		3,000,000.00		
9180	குத்தகைக்கு வழங்கப்பட்ட சொத்துக்கள்		-		

3.10 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

**. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் போது, கணக்காய்வாளர் தலைமையதிபதியால் சமர்பபிக்கப்பட்டகணக்காய்வு அறிக்கை ஸ்கேன் (SCAN) செய்யப்பட்டு இதில் இணைக்கப்பட்டுள்ளது.

தலைப்பு 210 – அரசாங்க தகவல் திணைக்களம்

---

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அரசாங்க தகவல் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2020 யூன் 25 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தம்பர் 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டது.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை
மீளாய்வாண்டின் போது மூலதன சொத்துக்களை சுவீகரிப்பதற்காக ரூபா 42,571,377 செலவிடப்பட்டிருந்த போதிலும், நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்றின் பிரகாரம் அது 42,400,678 ஆனமையால் ரூபா 170,699 ஆன வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.	செலவிடப்பட்டுள்ள அனைத்து செலவினங்களும் நிதிக் கூற்றுக்களில் உரியவாறு உள்ளடக்க வேண்டியமை.	பேரேட்டின் பிரகாரம் ரூபா 42,571,377 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், திணைக்களத்தின் மூலம் ரூபா 42,405,177 ஆன சொத்துக்களை கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை
(அ)	காசுப் பாய்ச்சல் கூற்றின் வருமானம் அல்லாத பெறுவனவுகள் ரூபா 281,860 மற்றும் ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 13,885,179 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஒருங்கிணைக்கப்பட்ட பரீட்சை மீதியின் பிரகாரம் வருமானம் அல்லாத பெறுவனவுகளின் தலைப்பொன்று இல்லாதிருந்ததுடன் ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 21,131,018 ஆகும். அதன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 6,963,979 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	சுற்றறிக்கையின் அறிவுரைகளின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரிக்க வேண்டியமை மற்றும் அதன் பிரகாரம் பரீட்சை மீதியின் பெறுமதிகள் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றின் பெறுமானங்கள் சமனாக காணப்படல் வேண்டும்.	காசுப்பாய்ச்சல் கூற்றில் ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 13,885,813 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் ஏனைய தலைப்புக்களுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 21,131,018 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது.
(ஆ)	காசுப் பாய்ச்சல் கூற்றில் முற்பணங்களின் அறவீடு ரூபா 452,413 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 10,062,947 ஆனமையால் காசுப் பாய்ச்சல் கூற்றின் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சல் 9,610,534 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	பரீட்சை மீதியினதும் காசுப் பாய்ச்சல் கூற்றினதும் பெறுமானங்கள் சமனாகும் வரையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை.	காசுப் பாய்ச்சல் கூற்றில் முற்பணங்களின் அறவீடு ரூபா 452,413 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 10,062,947 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது.
(இ)	காசுப்பாய்ச்சல் கூற்றில்	- மேற்படி -	காசுப்பாய்ச்சல் கூற்றில்

	வைப்புக்களின் பெறுவனவுகள் ரூபா 257,225 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருங்கிணைந்த பரீட்சைமீதியின் பிரகாரம் அந்த மீதி ரூபா 1,302,547 ஆனமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் நிதிச் செயற்பாடுகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 1,045,322 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.		வைப்பு பெறுவனவுகளாக ரூபா 257,222 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அந்த பெறுமானம் ரூபா 1,302,546 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது.
(ஈ)	காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டு செலவினமாக ரூபா 230,937,450 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அந்த பெறுமானம் ரூபா 248,176,053 ஆனமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட காசுப்பாய்ச்சல் ரூபா 17,238,603 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	பரீட்சை மீதி மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றின் பெறுமானங்கள் சமனாகும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியமை.	காசுப்பாய்ச்சல் கூற்றில் ஆளணி வேதனம் மற்றும் செயற்பாட்டு செலவினம் ரூபா 230,937,449 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அந்த பெறுமானம் ரூபா 248,176,052 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது.
(உ)	காசுப்பாய்ச்சல் கூற்றின் பௌதீக சொத்துக்களின் நிர்மாணம் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றுதல் ஆகியவற்றுக்காக ரூபா 62,281,390 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அந்த பெறுமதி ரூபா 62,662,622 ஆனமையால் முதலீட்டு செயற்பாடுகளுக்காக செலவிடப்பட்ட காசுப் பாய்ச்சல் ரூபா 381,232 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.	செலவிடப்பட்டுள்ள அனைத்து செலவினங்களும் நிதிக் கூற்றுக்களில் உரிய முறையில் உள்ளடக்கப்பட வேண்டியமை.	காசுப் பாய்ச்சல் கூற்று பௌதீக சொத்துக்களின் நிர்மாணங்கள் அல்லது கொள்வனவுகள் மற்றும் ஏனைய முதலீடுகளை சுவீகரித்தல் ஆக ரூபா 62,281,389 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ஒருங்கிணைந்த பரீட்சை மீதியின் பிரகாரம் அந்த பெறுமானம் ரூபா 62,662,622 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது.

1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை
நட்டங்கள் தொடர்பான பதிவேடு		
நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் பேணிச் செல்ல வேண்டிய நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் தொடர்பான பதிவேட்டில் மீளாய்வாண்டின் போது இடம்பெற்ற 3 வாகன விபத்துக்களுக்கு உரிய நட்டத்தின் பெறுமதி, பழுதுபார்ப்பதற்கான செலவினம், அறவிடக்கூடிய பெறுமதி ஆகியவற்றை உள்ளடக்கி நட்டங்கள் மற்றும் இழப்புக்களுக்கான பதிவேடு நாளதுவரையாக பேணப்பட்டிருக்க வில்லை.	நிதிப்பிரமாணம் 110 இன் பிரகாரம் நட்டங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக பேணப்பட வேண்டியமை.	வாகன விபத்துக்கள் தொடர்பில் உரிய விசாரணைப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டவாறு உள்ளன.

2. நிதி மீளாய்வு

2.1 செலவின முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை
மீண்டெழும் செலவின விடயங்கள் 04 இன் தேறிய நிதியேற்பாட்டில் 09 சதவீதம் முதல் 68 சதவீதம் வரை எஞ்சியிருந்ததுடன் அந்த செலவின விடயங்களுக்கு உரிய மதிப்பீட்டின் போது குறைபாடுகள் நிலவியமை அவதானிக்கப்பட்டது.	நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியமை.	தேவை ஏற்படாமையும் எதிர்பார்த்த பணிகள் நிறைவேற்றப்படாத காரணத்தாலும் நிதியேற்பாடுகள் எஞ்சியிருந்தன.

2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை
(அ)	2020 மே 31 ஆந் திகதியளவில் கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களின் மூலம் செலுத்தப்பட்டிருந்த ரூபா 595,812 தொகையான பொறுப்புக்கள் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகளாக பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.	நிதிப்பிரமாணம் 150 இன் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அனைத்து பொறுப்புகளும் வெளிப்படுத்தப்பட வேண்டியமை.	கணக்காய்வு அவதானிப்பு சரியானதாகும்.
(ஆ)	நிதிப்பிரமாணம் 94(1) பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்படும் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நிதியாண்டிற்கான நிதியேற்பாடு விஞ்சப்படலாகாது. எனினும், 09 செலவின விடயங்களின் நிதியேற்பாட்டினை விஞ்சி ரூபா 11,842,717 பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்களின் அளவானது அந்த ஆண்டிற்கான நிதியேற்பாட்டினை விஞ்சக்கூடாது.	திணைக்களத்தின் அதுவரையிலும் ஏற்பட்ட தேவைப்பாடுகளின் அடிப்படையில் மற்றும் நிதிப் பிரமாணம் 94(2) இன் பிரகாரம் இந்த பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2.3 வைப்பு மீதிகள்

கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை
ரூபா 7,488,595 தொகையான காலாவதியான வைப்புக்கள் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது கூடியளவு விரைவாக மீள செலுத்துவதற்கு அல்லது	காலாவதியான வைப்புக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை.	ஒப்பந்தத்தில் நிலவும் சிக்கல்கள் காரணமாக இந்தப் பணம் விடுவிக்கப்பட்டிருக்க வில்லை.

ஒப்பந்த வைப்புக்கள் தொடர்பில் ஒப்பந்தங்களின் நட்டங்களை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை
வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தினால் 07 மூலோபாயங்களுக்கு உரியதாக 64 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த போதிலும், அவற்றுள் 06 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.	மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்பட வேண்டிய பணிப் பொறுப்புக்களை திட்டமிட்டவாறு நிறைவேற்ற வேண்டியமை.	முப்பரிமாண நிகழ்ச்சித் திட்டங்களை அரசின் திரைப்பட பிரிவின் மூலம் தயாரிப்பதற்கு கோரிக்கை கிடைக்காமையால் அந்த நிகழ்ச்சிகளை தயாரிக்க முடியாதிருந்ததுடன் தெசத்திய சஞ்சிகையை ஒத்ததாக வெளியிடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ள திங்கள் எனும் தமிழ் மொழி மூல சஞ்சிகைக்கு பொருத்தமான பதவியணியொன்று இல்லாதிருந்தமையால் அதனை வெளியிடாமைக்கு பிரதானமான காரணமாக அமைந்திருந்தது. பாடசாலை வெகுசன ஊடக பாடத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்காக விடயத்திற்கு பொறுப்பான பேராசிரியர்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த செயலமர்வும் 2019 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக நடாத்தப்பட்டிருக்கவில்லை.

3.2 எதிர்பார்த்த அடைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை
வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 64 செயற்பாடுகளில் ரூபா 12.5 நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த 08 செயற்பாடுகளின் எதிர்பார்த்த அடைவு மட்டம் பெற்றுக் கொள்ளப்பட்டிராததுடன் அது 12 சதவீதம் முதல் 96 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.	மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட வேண்டிய பணிப் பொறுப்புக்கள் திட்டமிட்டவாறு நிறைவேற்றப்பட வேண்டும்.	தெசத்திய சஞ்சிகை - வருடாந்த வலயங்கள் 24 இல் 3 தவிர்க்க முடியாத காரணங்களால் அச்சிட முடியாதிருந்தமையும் அப்போது அமைச்சரவை தீர்மானத்தினை வெளியிடும் செய்தி கலந்துரையாடல்கள் இடைநிறுத்தப்பட்டமையும் நிலவிய அரசியல் நிலைமை மற்றும் ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற சனாதிபதி தேர்தல் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் ஆகியவற்றின் காரணமாக சில பணிகள் 2021 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்துவதற்கு பிற்போடப்பட்டிருந்தது.

3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை
(அ) தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(உ) வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைகள் திட்டம் ஆறு மாதங்களுக்கு மேற்படாத காலத்தினுள் நாளாந்தம் நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்க வில்லை.	தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை.	பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(உ) இன் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ)	தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.2(அ) வழிகாட்டியின் பிரகாரம் பெறுகை பணியொன்று ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பம் முதல் நிறைவு செய்யப்படும் சந்தர்ப்பம் வரையிலும் ஒவ்வொரு பெறுகை நடமுறைகளினதும் படிமுறைகள் கிரமமான முறையில் விபரிக்கப்பட்ட பெறுகைகள் கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை.	- மேற்படி -	பெறுகைகள் கால அட்டவணையையும் உள்ளடக்கி பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது.

3.4 நட்டங்கள் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	**பரிந்துரை**	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**
(அ)	2019 ஆம் ஆண்டிற்கு உரியதாக இடம்பெற்ற 2 வாகன விபத்துக்கள் தொடர்பில் நிதிப் பிரமாணம் 104 மற்றும் 105 இன் பிரகாரம் பொறுப்புக் கூற வேண்டியவர்களை இனங்காணுதல், நட்டம் மற்றும் இழப்புக்கள் தொடர்பில் அறவீடுகளை மேற்கொள்ளல் ஆகியவற்றுக்கு நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஆரம்ப பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.	விபத்தொன்று இடம்பெற்ற பின்னர் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் துரிதமாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை.	இந்த விபத்து தொடர்பில் குறித்த உத்தியோகத்தர் களிடம் பதிவுகள் பெற்றுக் கொள்ளப்பட்டு விசாரணைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

(ஆ)	முன்னாள் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்ட கைத் தொலைபேசி மற்றும் மடிக்கணினி 2020 நவம்பர் மாதம் வரையிலும் மீள கையளிக்கப்பட்டிராததுடன் அவை 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் பற்றாக்குறையாகவும் காண்பிக்கப்பட்டிருந்தது. பொருட்களை கையளிக்காது 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும், அந்தஉத்தியோகத்தருக்கு எதிராக 2020 செப்தெம்பர் மாதம் வரையிலும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	நட்டம் அல்லது இழப்பின் பெறுமதி குறித்த உத்தியோகத்த ரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை.	இந்த உபகரணங்களை திணைக்களத்திற்கு மீள கையளித்தல் தொடர்பில் உரிய உத்தியோகத்தருடன் கைத்தொலைபேசியில் கலந்துரையாடியதுடன் கூடிய விரைவில் அந்த உபகரணங்களை திணைக்களத்திற்கு மீள கையளிப்பதாக உத்தியோகத்தர் தெரிவித்திருந்தார்.

3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	**பரிந்துரை**	**கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை**
	---	---	---
(அ)	சேவையை கைவிட்டுச் சென்றுள்ள இரு உத்தியோகத்தர்களி டமிருந்து அறவிட வேண்டிய 18 வருடங்களை விஞ்சிய பழைமையான ரூபா 195,040 ஆன கடன் மீதி 2020 யூன் மாதம் வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை	கடன் மீதிகளை அறவிடுதல் தொடர்பில் தாபன விதிக்கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியமை.	எம்மால் குறித்த அனைத்து கடிதங்களினதும் பிரதிகள் 2020.02.24 ஆந் திகதி அரச நிதி திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அதற்காக அங்கீகாரம் கிடைத்த பின்னர் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(ஆ)	பணி வறிதாக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 03 மாதங்களுக்கு கூடிய ரூபா 244,390 ஆன கடன் மீதி 2020 நவம்பர் மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை	- மேற்படி -	முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றினை நடாத்தி இறுதி தீர்மானமொன்று வழங்கப்படும் வரையிலும் 2020.03.19 ஆந் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அரைச் சம்பளம் செலுத்துதல் தகவல் பணிப்பாளர் நாயகத்தால் பின்பற்றப்பட்டுள்ளதுடன் அரைச் சம்பளம் செலுத்தும் போது உத்தியோகத்தருக்கு ஏற்படும் பொருளாதார சிக்கலினை கருத்திற் கொண்டு விதவைகள் மற்றும் அனாதைகள் பங்களிப்புப் பணம், அஹ்ரகார காப்புறுதிப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் மாத்திரம் அறவிடப்பட்டுள்ளது.

4. நல்லாளுகை

4.1 உள்ளகக் கணக்காய்வு

கணக்காய்வு அவதானிப்பு	பரிந்துரை	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 40(1) பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் 2020 செப்தெம்பர் மாதம் வரையிலும் திணைக்களத்திற்கான உள்ளக கணக்காய்வாளர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.	2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் நிதிப் பிரமாணம் ஆகியவற்றின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு அலகொன்றினை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை.	உள்ளக கணக்காய்வாளர் பதவியில் வெற்றிடத்தினை அரச பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சினால் உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டு அந்த வெற்றிடம் நிரப்பப்பட வேண்டும்.

அத்தியாயம் 04

செயலாற்றுகை சுட்டி

செயலாற்றுகை சுட்டி

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகைச் சுட்டி (செயலாற்றுகை திட்டத்துக்கு அமைய)

விசேட சுட்டிகள்	**எதிர்பார்க்கும் அடைவுகளின் வீதம் (%) ஆக உண்மை அடைவுகள்**		
	100% - 90%	**75% - 89%**	**50% - 74%**
தகவல் அறியும் உரிமையை மேம்படுத்துவதற்காக அரச அபிவிருத்தி பிரச்சார செயற்திட்டம் தொடர்பான தகவல்களை மக்களுக்கு தொடர்பூட்டல் செய்தல்	-	86%	-
தராதரம் மிக்க ஊடக பாரம்பரியத்தை உருவாக்குதல்	96%	-	-
ஊடக புலனாய்வு செயற்பாடுகளை பலப்படுத்துதல்	-	-	63%
நல்லாட்சி, நல்லிணக்கம், நிலைபெறுதகு அபிவிருத்தியை நிறுவி கருத்து வெளியிடுதல் மற்றும் பேச்சு சுதந்திரத்தை உறுதி செய்தல்.	-	-	52%
தொழில்வாண்மை மிக்க ஊடகவியலாளர்களை உருவாக்குதல்	-	-	64%
ஊடகத்துறை சார்ந்த ஆராய்ச்சி செயற்பாடுகள், அபிவிருத்தி மற்றும் திட்டமிடலை உருவாக்குதல்	-	75%	-

அத்தியாயம் - 5

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடைதல் தொடர்பான செயலாற்றுகை

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை *(SDG)* அடைதல் தொடர்பான செயலாற்றுகை

5.1 அடையாளம் காணப்பட்ட ஏற்புடைய நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள்

இலக்கு / நோக்கம்	இலக்கு	அடைவுச் சுட்டி	இதுவரை அடையப் பெற்ற விகிதம்		
			0% - 49%	50% - 74%	75% - 100%
நிலைபெறுதகு அபிவிருத்திக்கான உலக ஒத்துழைப்பை மீண்டும் வலுவூட்டுதல் மற்றும் அமுல்படுத்துதல்	நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் மக்களைத் தெளிவூட்டுதல் மற்றும் அது தொடர்பாக பரந்த புரிதலை வழங்குதல்	அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்புகளை நடத்துதல்.	-	55%	-
		பாடசாலை ஊடக சந்திப்புகளை நடத்துதல் .	48%	-	-
		சமூக ஊடகங்கள் (youtube, facebook, twitter) ஊடாக மக்களைத் தெளிவூட்டுதல்.	-	-	80%

5.2 நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதிலான வெற்றி மற்றும் சவால்கள் சுருக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளன.

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் வெற்றி :

நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் பொது மக்களை தெளிவுபடுத்துதல் மற்றும் அது தொடர்பான பரந்த புரிதலை வழங்குவதற்காக அரசாங்க தகவல் திணைக்களத்தால் YouTube மற்றும் Face book ஆகிய சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் செயன்முறை ஆரம்பமானது.

சவால்கள் :

நிலவுகின்ற போட்டியான சூழலில் சமூக ஊடககங்கள் மூலம் மக்களுக்கு சரியான மற்றும் நம்பகமான தகவல்களை துரிதமாக வழங்குதல்.

அத்தியாயம் -06

மனித வளக் கட்டமைப்பு

மனித வளக் கட்டமைப்பு

06.1 ஊழியர் எண்ணிக்கை முகாமைத்துவம்

	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி	தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை	வெற்றிடம் / (மிகை) **
சிரேஷ்ட	17	12	05
மூன்றாம் நிலை	16	02	14
இரண்டாம் நிலை	245	174	71
ஆரம்பநிலை	53	41	12

06.2 ** நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக மனித வளப் பற்றாக்குறை அல்லது மிகை எவ்வாறு தாக்கம் செலுத்துகிறது என்பது சுருக்கமாக காட்டப்படுகிறது.

மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மனித வள பற்றாக்குறை திணைக்களத்தின் செயலாற்றுகையில் நேரடியாக தாக்கம் செலுத்துகிறது. குறிப்பாக தொழிநுட்ப பணிகளை மேற்கொள்கின்ற ஆளணியில் வெற்றிடம் நிலவுவதன் காரணமாக நாளாந்த கடமைகளை நிறைவேற்றும் போது சிரமங்கள் ஏற்படுகின்றது. அதாவது, திணைக்களப் பதவிகளில் சேவையில் ஈடுபட்டுள்ள அறிவு மற்றும் திறமை வாய்ந்த உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுதல் அதற்கான முக்கிய காரணமாக அமைகின்றது. புதிய உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு நீண்ட காலம் எடுக்கலாம். அத்துடன் அப்பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களுக்காக பதவியுயர்வு வழங்குவதில் காணப்படுகின்ற தடைகள் காரணமாகவும் தற்போது பல மட்டங்களிலுள்ள பதவிகளில் உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுகிறது.

06.3 மனித வள அபிவிருத்தி

நிகழ்ச்சித் திட்டத்தின் பெயர்	பயிற்றுவிக்கப் பட்ட ஆளணி எண்ணிக்கை	நிகழ்ச்சிக் காலப்பகுதி	மொத்த முதலீடு (RS'000)		நிகழ்ச்சித்திட்டத்தின் தன்மை (உள்நாட்டு / வெளிநாட்டு)	அடைவ / பெற்ற அறிவு *
			உள்நாட்டு ரூ.	வெளிநாட்டு ரூ.		
பயிற்சிப் பாடநெறிகள்	140	2019.01.01 திகதி தொடக்கம் 2019.12.31 திகதி வரை	735,2000/-	-	உள்நாட்டு	அந்தந்த விடயம் தொடர்பிலும் விடய அறிவைப் பெறுதல்

பயிற்சி செயலமர்வு	01	2019.12.08 திகதி தொடக்கம் 2019.12.15 திகதி வரை	-	68,700/- மற்றும் 3,802.66 US $	வெளிநாட்டு	திரைப்படக் காப்புப் பற்றிய அறிவைப் பெறுதல்

* **நிறுவனத்தின் செயலாற்றுகைக்காக பயிற்சிகள் எவ்வாறு பங்களிக்கின்றன என்பதை சுருக்கமாக தெளிவுபடுத்தப்படுகிறது.**

அரச சேவையில் புதிதாக நியமனம் பெற்ற அலுவலர்கள் இணைக்கப்பட்டுள்ள பிரிவுகளுக்கு ஒப்படைக்கப்படும் கடமைகள் தொடர்பாக வெளிவாரி நிறுவனங்கள் மூலம் உரிய பயிற்சியை வழங்குவதன் மூலம் தமது கடமைகளை சரியாக, முறையாக மற்றும் வினைத்திறனாக நிறைவேற்றுவதற்கான இயலுமை கிடைத்துள்ளது. அத்துடன் இதன் மூலம் ஆளணியினருக்கு ஆர்வத்தை ஏற்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. புதிய அறிவைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அறிவை இற்றைப்படுத்துவதற்கு வாய்ப்பு வழங்குவதன் மூலம் திணைக்களத்தின் செயலாற்றுகையை உயர் மட்டத்தக்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக அலுவலர்களை அனுப்புவதன் மூலம் திணைக்களத்தின் திரைப்பட பிரிவின் கீழான செயற்பாடுகளை டிஜிற்றல்மயப்படுத்தும் இயலுமை கிடைத்துள்ளது. அதாவது, பழைய திரைப்படங்கள், ஆவணத் திரைப்படங்கள் போன்றவற்றை காப்புச் செய்வதற்காக டிஜிற்றல்மயமாக்கல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் பொதுமக்கள் / ஊடகவியலாளர்கள் அல்லது தேவையான வேறு நபர்கள் தேவையான சந்தர்ப்பங்களில் பயன்படுத்துவதற்கு அல்லது பார்வையிடுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவுள்ளது.

அத்தியாயம் - 7

இணக்க அறிக்கை

இல	ஏற்புடையதாக்க வேண்டிய தேவை	இணக்க நிலை (இணங்குகிறது / இணங்கவில்லை)	இணங்கவில்லை எனின் அதற்கான சுருக்கமான தெளிவுபடுத்தல்	இணக்கமின்மையை எதிர்காலத்தில் தவிர்ப்பதற்கு உத்தேசிக்கும் சரியான தீர்மான செயன்முறை
1	பின்வரும் நிதிக்கூற்று / கணக்குகள் உரிய திகதியில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.			
1.1	வருடாந்த நிதிக் கூற்றுக்கள்	இணங்குகிறது	-	-
1.2	அரச அலுவலர்களின் முற்பண கணக்கு	இணங்குகிறது	-	-
1.3	தொழில்முயற்சி மற்றும் உற்பத்தி முற்பண கணக்கு (வர்த்தக முற்பண கணக்கு)	ஏற்புடையதல்ல	-	-
1.4	களஞ்சிய முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல	-	-
1.5	விசேட முற்பணக் கணக்கு	ஏற்புடையதல்ல	-	-
1.6	பிற	ஏற்புடையதல்ல	-	-
2	**புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பராமரித்தல் (நி.ஒ. 445)**			
2.1	267/2018 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைய நிலையான சொத்து பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்கவில்லை	271/2019 இலக்க அ.க.சுற்றிக்கைக்கு (நிதிக் கூற்று – 2019) மூலம் தொடர்ந்தும் குறித்த பதிவேட்டை பேணுதல் அத்தியாவசியம் அற்றது என தெரிவிக்கப்பட்டள்ளது.	
2.2	தனிநபர் சம்பள பதிவேடு / தனிநபர் சம்பள அட்டை இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகிறது	-	-
2.3	கணக்காய்வு ஐயவினா பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகிறது	-	-
2.4	உள்ளக கணக்காய்வு அறிக்கைப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகிறது	-	-
2.5	அனைத்து மாதாந்த கணக்கு சாராம்சம் (CIGAS) தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-

2.6	காசோலை மற்றும் காசுக்கட்டளை பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகிறது	-	-
2.7	இருப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகிறது	-	-
2.8	மொத்த இருப்புப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகிறது	-	-
2.9	இழப்பு, நட்டப் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகிறது	-	-
2.10	பொறுப்புகள் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகிறது	-	-
2.11	உப படிவங்கள் (GA – N 20) பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகிறது	-	-
03	**நிதிக் கட்டுப்பாட்டுக்கான பணிகளை கூட்டிணைத்தல். (நி.ஒ. 135)**			
3.1	நிறுவனத்தில் நிதி அதிகாரம் உரித்தளிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
3.2	நிறுவனத்தில் நிதி அதிகாரம் உரித்தளிக்கப்பட்டிருத்தல் தொடர்பாக தெளிவுபடுத்தப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
3.3	அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இரண்டு அல்லது அதற்கு கூடிய எண்ணிக்கையான அலுவலர்களால் அங்கீகரிக்கப்படும் வகையில் அதிகாரம் உரித்தளிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
3.4	2014.05.11 திகதிய 171/2004 இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு அமைய, அரச சம்பளச் சிட்டை மென்பொருள் பெக்கேஜ் பாவனையின் போது கணக்காளரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு செயற்படுதல்.	இணங்குகிறது	-	-
4	**வருடாந்த திட்டத்தை தயாரித்தல்.**			
4.1	வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல்	இணங்குகிறது	-	-

4.2	வருடாந்த பெறுகைத் திட்டம் தயாரித்தல்	இணங்குகிறது	-	-
4.3	வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரித்தல்	ஏற்புடையதல்ல	-	-
4.4	வருடாந்த மதிப்பீட்டை தயாரித்து தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்துக்கு (NBD) உரிய திகதியில் சமர்ப்பித்தல்.	இணங்குகிறது	-	-
4.5	வருடாந்த காசுப்பாய்ச்சல் கூற்று உரிய திகதியில் திறைசேரி செயற்பாட்டத் திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
5	கணக்காய்வு ஐயவினாக்கள்			
5.1	கணக்காய்வாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள திகதியில் அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதில் வழங்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
6	**உள்ளகக் கணக்காய்வு**			
6.1	நி.ஒ 134 (2) DMA/1-2019 இலக்கத்துக்கு அமைய ஆண்டின் ஆரம்பத்தில் கணக்காய்வாளர் நாயகத்துடன் கலந்துரையாடிய பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டத்தை தயாரித்தல்.	ஏற்புடையதல்ல	உள்ளக கணக்காய்வாளர் பதவிக்கு ஒரு அலுவலர் நியமிக்கப்படவில்லை.	-
6.2	அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளுக்கும் ஒரு மாத காலத்தினுள் பதில் வழங்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	2019 ஆண்டுக்கான கணக்காய்வு ஐயவினாக்கள் கிடைக்கவில்லை.	
6.3	2018 / 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 40(4) உப பிரிவுக்கு அமைய, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	ஏற்புடையதல்ல		

6.4	நிதி ஒழுங்குகள்134 (3) பிரிவுக்கு அமைய, அனைத்து உள்ளக கணக்காய்வு அறிக்கைகளினதும் பிரதிகள் கணக்காய்வாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	ஏற்புடையதல்ல		
7	**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**			
7.1	DMA சுற்றறிக்கை 1-2019 அமைய, குறித்த ஆண்டில் ஆகக் குறைந்தது 4 கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்களை நடாத்தியிருத்தியிருத்தல்.	இணங்குகிறது	-	-
8	**சொத்து முகாமைத்துவம்**			
8.1	01/2017 இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றிக்கையின் 7 ஆவது அத்தியாயத்துக்கு அமைய சொத்து கொள்வனவு செய்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	2020 பெப்ரவரி மாதத்தில் ஆரம்ப மீதியும் அடங்கலாக அனைத்து சொத்துக்களும் நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது.	
8.2	மேற்குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 13 ஆவது அத்தியாயத்துக்கு அமைய, அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை அமுல்படுத்துதல், ஒருங்கிணைத்தலுக்காக பொருத்தமான தொடர்பு அலுவலர் நியமிக்கப்பட்டு, அந்த அலுவலர் தொடர்பான தகவல்கள் கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
8.3	05/2016 இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைக்கு அமைய, இருப்பு கணக்கெடுப்பு மேற்கொள்ளப்பட்டு உரிய	இணங்கவில்லை	2019 ஆண்டுக்குரிய இருப்பு கணக்கெடுப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.	

	அறிக்கை உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.			
8.4	வருடாந்த இருப்பு கணக்கெடுப்பில் கண்டறியப்பட்ட மிகை, பற்றாக்குறை மற்றும் ஏனைய விதந்துரைகள் சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்தில் மேற்கொள்ளப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	2019 ஆண்டுக்குரிய இருப்பு கணக்கெடுப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.	
8.5	நி.ஒ. 272 இற்கமைய சேதமடைந்த பொருட்கள் அகற்றப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	2019 ஆண்டுக்குரிய பொருட் கணக்கெடுப்பு செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது.	
9	**வாகன முகாமைத்துவம்**			
9.1	இயங்குநிலை வாகனங்களுக்காக பயணப் பதிவு மற்றும் மாதாந்த சாராம்ச அறிக்கை தயாரிக்கப்பட்டு உரிய திகதியில் கணக்காய்வாளர் தலைமையதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
9.2	வாகனம் சேதமடைந்து 06 மாத காலத்தினுள் அகற்றப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	இதற்கான செயன்முறைக்கு நீண்ட காலம் செல்கிறது.	பாவனையிலிருந்து அகற்றப்படும் வாகனங்கள் சரியாக அடையாளம் காணப்பட்டு பொருத்தமான நடவடிக்கைகளை விரைவாக முன்னெடுத்தல்.
9.3	வாகன லொக் புத்தகம் இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகிறது	-	-
9.4	ஒவ்வொரு வாகன விபத்துக்கள் தொடர்பிலும் நி.ஒ. 103, 104, 109 மற்றும் 110 இற்கமைய செயற்படுதல்.	இணங்கவில்லை	ஏற்பட்டுள்ள, ஆனால் இதுவரை பரிசீலனை நடாத்தப்படாத ஒவ்வொரு வாகன விபத்துக்கள் தொடர்பிலும் பரிசீலனை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.	
9.5	2016.12.29 திகதிய 2016/30 இலக்க பொது நிர்வாக சுற்றிக்கையின் 3.1 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள	இணங்குகிறது	-	-

	ஏற்பாடுகளுக்கு அமைய, வாகனங்களின் எரிபொருள் தகனமடைதல் மீண்டும் பரிசீலிக்கப்படுதல்.			
9.6	குத்தகை காலப் பகுதியின் பின்னர் குத்தகை வாகன லொக் புத்தகங்களின் முழுமையான உரிமை உரித்தளிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
10	**வங்கிக் கணக்கு முகாமைத்துவம்**			
10.1	உரிய திகதியில் வங்கி கணக்கிணக்க கூற்று தயாரிக்கப்பட்டு, சான்றுபடுத்தப்பட்டு, அவை கணக்காய்வுக்கு அனுப்பப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
10.2	மீளாய்வு ஆண்டில் அல்லது அதற்கு முந்திய ஆண்டுகள் தொடக்கம் முன் கொண்டுவரப்பட்ட செயலற்ற வங்கிக் கணக்குகள் சீராக்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
10.3	வங்கி கணக்கிணக்க கூற்றுக்கள் மூலம் கண்டறியப்பட்ட மற்றும் சீராக்கப்பட வேண்டியிருந்த மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குகளுக்கமைய செயலாற்றி அந்நிலுவை ஒரு மாத காலத்தில் சீராக்கப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
11	**நிதி ஒதுக்கீடுகளின் பயன்பாடு**			
11.1	வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடு அவற்றின் எல்லை தாண்டி செல்லாத வகையில் செலவிடப்பட்டிருத்தல்.	இணங்குகிறது	-	-
11.2	நி.ஒ .94 (1) அமைய வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் பாவிக்கப்பட்ட பின்னர் ஆண்டின் இறுதியில் எஞ்சிய நிதி ஒதுக்கீட்டு எல்லையைக் கடக்காத வகையில்	இணங்கவில்லை	அரசாங்கத்தின் அத்தியாவசிய பிரச்சாரங்களை மேற்கொள்ள நேரிடுவதால் ஒதுக்கீட்டு எல்லையைக் கடந்து பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.	வருட இறுதியில் எஞ்சிய ஒதுக்கீட்டு எல்லையை மீறாமல் இருக்கும் வகையில் பெறுப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல்

	பொறுப்புகளுக்கு உடன்படுதல்.			
12	**அரச அலுவலர்களின் முற்பணக் கணக்கு**			
12.1	வரையறைகளுக்கு இணங்குதல்.	இணங்குகின்றது	-	-
12.2	நிலுவையாக உள்ள நிலுவைக் கடன் மீதி தொடர்பாக காலப்பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
12.3	ஒரு ஆண்டுக்கு கூடுதலான காலமாக இருக்கும் நிலுவை கடன் மீதிகள் சீராக்கல்	இணங்கவில்லை	சட்டமா அதிபரின் ஆலோசனை கோரப்பட்டுள்ளது. சட்டமா அதிபரின் ஆலோசனை கிடைத்த பின்னர் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.	எதிர்காலத்தில் உரிய காலத்தில் கடன் மீதிகளை சீராக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.
13	**பொது வைப்பு கணக்கு**			
13.1	காலாவதியான வைப்புகள் தொடர்பில் நி.ஒ. 571 க்கு அமைய செயற்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	ஊடக நிலைய கட்டிடத்துக்குரிய பிரச்சினைகள் இதுவரை தீர்க்கப்படவில்லை.	தடுத்து வைத்தல் நிதி ஒழுங்குக்கமைய விடுவிக்க நடவடிக்கை எடுத்தல்.
13.2	பொது வைப்புகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்கு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
14	**கட்டுநிதிக் கணக்கு**			
14.1	மீளாய்வு ஆண்டின் இறுதியில் காசுப் புத்தக மீதி திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்துக்கு செலுத்தப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
14.2	நி.ஒ 371 ற்கு அமைய விடுவிக்கப்பட்ட இடைக்கால கட்டுநிதி, குறித்த பண நிறைவடைந்து ஒரு மாத காலத்தில் சீராக்கப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	ஜனாதிபதி தேர்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் இதுவரை தேர்தல்கள் திணைக்களத்தினால் மீள்நிரப்பல் செய்யப்படவில்லை.	-
14.3	நி.ஒ 371 ற்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட எல்லையைக் கடந்து செல்லாத வகையில் இடைக்கால கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-

14.4	கட்டுநிதிக் கணக்கு மீதி, திறைசேரிப் புத்தகத்துடன் மாதாந்தம் இணக்கம் செய்யப்படுதல்.	இணங்குகின்றது	-	-
15	**வருமானக் கணக்கு**			
15.1	ஏற்புடைய விதிகளுக்கு அமைய, சேகரிக்கப்பட்ட வருமானம் மீள செலுத்தப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
15.2	சேகரிக்கப்பட வருமானம், வைப்புக் கணக்குக்கு வரவு வைக்கப்படாமல் நேரடியாக வருமானத்தில் வரவு வைக்கப்படுதல்.	இணங்குகின்றது	-	-
15.3	நி.ஒ 176 ற்கு அமைய நிலுவை வருமான அறிக்கை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	ஏற்புடையதல்ல	-	-
16	**மனித வள முகாமைத்துவம்**			
16.1	அங்கீகரிக்கப்பட்ட ஆளணி வரையறைக்குள் ஆளணி பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
16.2	ஆளணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் கடமைப் பட்டியல் எழுத்து மூலம் வழங்கப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	தற்போது நிர்வாக மற்றும் கணக்கு பிரிவு அலுவலர்களுக்கு மட்டும் வழங்கப்படுள்ளதுடன், எதிர்காலத்தில் திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளினதும் அலுவலர்களுக்கு வழங்குவதற்கான கலந்துரையாடல் மேற்கொள்ளப்படுகிறது.	
16.3	2017.09.20 திகதிய 04/2017 இலக்க MSD சுற்றறிக்கைக்கு அமைய, அனைத்து அறிக்கைகள் முகாமைத்துவ சேவை திணைக்களத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
17	**தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குதல்**			
17.1	தகவல் அறியும் உரிமை சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு அமைய தகவல் அலுவலர் நியமிக்கப்பட்டு தகவல் வழங்கும் பதிவேடு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்படுதல்.	இணங்குகின்றது	-	-
17.2	நிறுவனம் தொடர்பான தகவல்கள் அதன்	இணங்குகின்றது	-	-

	இணையத்தளம் ஊடாக வழங்கப்பட்டுள்ளதுடன், இணையத்தளம் ஊடாக அல்லது மாற்று வழிகள் ஊடாக நிறுவனம் தொடர்பான பொது மக்களின் பாராட்டுகள் / குறைகளைத் தெரிவிப்பதற்கான வசதி வழங்கப்பட்டிருத்தல்.			
17.3	தகவல் அறியும் உரிமை சட்டத்தின் 08 மற்றும் 10 ஆவது பிரிவுகளுக்கமைய ஆண்டில் இரு தடவை அல்லது ஒரு தடவை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
18	**பிரஜைகள் பட்டயத்தை அமுல்படுத்தல்**			
18.1	05/2008 மற்றும் 05/2018 (1) இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றிக்கைக்கு அமைய பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்படுதல்.	இணங்கவில்லை	எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.	
18.2	அச்சுற்றறிக்கையின் 2.3 பந்திக்கு அமைய பிரஜைகள் / சேவை பெறுநர் பட்டயம் தயாரிக்கப்படுதல் மற்றும் அமுல்படுத்தப்படுதல் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக நிறுவனத்தால் முறைமை தயாரிக்கப்பட்டுள்ளது.	இணங்கவில்லை	எதிர்காலத்தில் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.	
19	**மனித வளத் திட்டத்தை தயாரித்தல்**			
19.1	2018.01.24 திகதிய 02/2018 இலக்க பொது நிருவாக சுற்றறிக்கையின் இணைப்பு 2 மாதிரியின் அடிப்படையில் மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	எதிர்காலத்தில் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.	

19.2	மேற்குறித்த மனித வளத் திட்டத்தில் ஆளணியின் அனைத்து உறுப்பினர்களுக்கும் ஒரு ஆண்டில் ஆகக் குறைந்தது 12 மணித்தியாலத்துக்கு குறையாத பயிற்சி வாய்ப்பு உறுதி செய்யப்பட்டிருத்தல்.	இணங்குகின்றது	-	-
19.3	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ள மாதிரியின் அடிப்படையில் அனைத்து ஆளணியினருக்குமான வருடாந்த செயலாற்றுகை உடன்படிக்கை கையொப்பம் இடப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	எதிர்காலத்தில் தயாரிக்க எதிர்பார்க்கப்படுகிறது.	
19.4	மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 6.5 பந்திக்கு அமைய மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படுதல், ஆற்றல் விருத்தி நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல், திறன் விருத்தி நிகழ்ச்சிகளை அமுல்படுத்துதல் தொடர்பான பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள சிரேஷ்ட அலுவலர் நியமிக்கப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	தொடர்ந்து வரும் காலங்கயில் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ள சிரேட்ட அலுவலர் ஒருவர் தயாரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது	
20	**கணக்காய்வு பந்திகளுக்கு பதிலளித்தல்**			
20.1	கடந்த ஆண்டுக்கான கணக்காய்வாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட கணக்காய்வு பந்திகள் மூலம் காட்டப்பட்டுள்ள குறைபாடுகள் திருத்தம் செய்யப்பட்டிருத்தல்.	இணங்கவில்லை	சில கணக்காய்வு பந்திகள் தொடர்பான செயன்முறைகள் முடிவடையவில்லை.	உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

முடிவு :

அரச கொள்கைகள், அரசின் அபிவிருத்தி செயன்முறைகள் உள்ளிட்ட தேசிய முக்கியத்துவம் மிக்க சமகால செயற்பாடுகள் மற்றும் மக்களுக்காக அரசினால் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்துதல் இந்த திணைக்களத்தின் பிரதான பொறுப்பு மற்றும் பணியாகும் என்பதுடன், மாறிவரும் உலக தொழில்நுட்ப போக்குகளுக்கு அமைவாக தகவல் தொழில்நுட்ப செயன்முறைகளை முகாமைத்துவம் செய்து, சுதந்திரமாகவும், பொறுப்புடனும் உயரிய ஊடக கலாச்சாரத்தை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் தலைமைத்துவம் வழங்குதல் பிரதான செயற்பாடாகும்.

இந்த கருமங்களை நிறைவேற்றுவதற்காக அதாவது, சிறந்த ஊடக சமூகத்தை உருவாக்குவதற்கு தேவையான பின்னணியை இலங்கைச் சமூகத்தில் நிறுவுவதற்கு பாவிக்கப்படும் கொள்கைகளை தயாரித்தல், திணைக்களத்தின் ஆளணி நிர்வாகம், அமைச்சு மற்றும் ஏனைய அரச, தனியார்துறை நிறுவனங்களுடன் கடமை ரீதியான உறவைப் பேணுதல் போன்ற செயற்பாடுகளுக்காக திணைக்களம் தனது ஆளணியை நெறிப்படுத்தும் அதேவேளை, அதன் அலுவலர்கள் தமது பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு தேவையான அறிவு, ஆற்றல் மற்றும் சூழமைவு உருவாக்கி வழங்கப்படுகிறது.

இவற்றில் திணைக்களம் நிறுவுவப்பட்ட அடிப்படை குறிக்கோளை அடைவதற்காக கூடுதலான கவனம் செலுத்தப்படுகிறது. திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளினதும் குறிக்கோளை அடைவதற்காக செயற்படுத்தப்படுகிறது.

அரசின் அபிவிருத்தி செய்திகளை மக்களிடம் கொண்டு செல்லும் வகிபாகத்தை நிறைவேற்றி அந்த குறிக்கோளை அடைவதற்காக செயற்படும் அரசாங்க தகவல் திணைக்களம் அதற்காக பல்வேறு செயற்பாடுகளை தமது திட்டத்தில் உள்ளடக்கி ஆண்டின் ஆரம்பத்தில் அந்த திட்டத்துக்காக அமைச்சின் அங்கீகாரம் பெறப்படுகிறது.

அதன் பின்னர் ஆண்டு முழுவதும் அந்த திட்டத்தை அமுல்படுத்துவதற்கு உரிய செயற்பாடுகளில் ஈடுபடுவதுடன், அதன் மூலம் அடைய முயற்சிக்கும் குறிக்கோளை அடிப்படையில் பின்வரும் வகையில் நிரற்படுத்தலாம்.

- தரநியமமான ஊடக மரபை உருவாக்குதல்.
- தகவல் அறியும் உரிமையை மேம்படுத்துவதற்காக அரசின் அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பான தகவல்களை மக்களிடம் கொண்டு செல்லுதல்.
- ஊடக விசாரணைச் செயன்முறையை பலப்படுத்ததல்.
- நல்லாட்சி, நல்லிணக்கம், நிலைபெறுதகு அபிவிருத்தியை நிறுவி கருத்து வெளிப்படுத்தல் மற்றும் பேச்சு சுதந்திரத்தை உறுதி செய்தல்.
- ஊடகத் துறைக்குரிய ஆராய்ச்சி செயற்பாடுகள், அபிவிருத்தி மற்றும் திட்மிடலை உருவாக்குதல்.

மேற்குறித்த குறிக்கோளை அடைவதற்காக திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படும் பிரதான செயற்பாடுகளை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

- ஏனைய அமைச்சுக்களால் நிறைவேற்றப்படும் கருமங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தும் நிகழ்ச்சிகள் (ஊடகவியலாளர்கள், பாடசாலை மாணவர்கள், ஊடக செயலாளர்கள் மற்றும் ஏனைய தரப்பினர்)

- ஊடக கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல். (அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பு மற்றும் ஏனைய அமைச்சுக்கள், நிறுவனங்களின் பணிகள் தொடர்பான)

- செய்தி அறிவித்தல்களை வெளியிடுதல்

- ஊடகக் கண்காணிப்பு சுற்றுலாக்களை ஏற்பாடு செய்தல்

- அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கட்டுரைகள் வெளியீடுகளை வெளியிடுதல்.

- புதிய ஊடகங்களை பாவித்து அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான பிரச்சாரத்தை வழங்குதல். (Face Book, You Tube, Twitter etc….)

- உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கான ஊடக அடையாள அட்டைகளை வழங்குதல்.

- நாளாந்தப் புலனாய்வு அறிக்கைகளை தயாரித்தல் மற்றும் தேவைக்கு அமைய பொருத்தமான பிரிவுகளை தெளிவுபடுத்துதல்

- சமகால ரீதியில் முக்கியத்துவம் மிக்க தலைப்புகள் மற்றும் ஊடகத் துறையின் புதிய போக்குகள் தொடர்பான ஆராய்ச்சி மேற்கொள்ளுதல் மற்றும் அறிக்கை சமர்ப்பித்தல்.

- ஆவணத் திரைப்படங்களை தயாரித்தல் மற்றும் பிரச்சாரம் செய்தல்

- தேசிய விழாக்கள் மற்றும் பேணி பாதுகாக்க வேண்டிய நிகழ்வுகளை ஆவணப்படுத்துதல் மற்றும் அந்த நிகழ்வுகளை நிழற்படம் எடுத்தல், பேணிப் பாதுகாத்தல்.

இவ்வாறு பல்வேறு விதமான வகிபாகங்கள் மற்றும் குறிக்கோள் ஊடாக அரசாங்க தகவல் திணைக்களம் தனது நாளாந்த கடமை செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனாகவும், அரச கொள்கைகளை மற்றும் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு சிறந்த உந்துசக்தியாக இருந்து அடுத்த ஆண்டிலும் செயற்படும்.

රජයේ ප්‍රවෘත්ති දෙපාර්තමේන්තුව,
163, කිරුළපන ඇවනිව්, පොල්හේන්ගොඩ, කොළඹ 05.

அரசாங்க தகவல் திணைக்களம்
இல.163, கிருலப்பனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05.

Department of Government Information
No.163, Kirulapone Avenue, Polhengoda, Colombo 05

www.dig.gov.lk www.news.lk